விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 22 சனிக்கிழமை (07.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 019

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கை தவறினால் சர்வதேச விசாரணை

### அமெரிக்கா அறிவிப்பு

**போரின்போது இடம்பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் தமது கடமையை நிறைவேற்றாத அல்லது நிறைவேற்ற விரும்பாத சூழ்நிலையில் தான் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை உருவாக்க முடியும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.**

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைப் பொறி முறையை உருவாக்கும் விடயத்தில் தலையிடக் கோரும் மனு அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு இணையத்தளம் மூலம் அனுப்பப்பட்டது.

வெள்ளை மாளிகையின் இணையத்தளம் மூலம் இந்தக் கோரிக்கை மனுவில் 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஒப்பமிட்டிருந்தனர்.

இந்தக் கோரிக்கை மனுவுக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் மைக்கல் எச்.போஸ்னர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.


அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் அண்மைய மோதல்களின்போது இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்களுக்கு பொறுப்புக் கூறுதல் தொடர்பான உங்களின் கவலைகளுடன் அமெரிக்காவும் பங்கு கொள்கிறது.

அத்துடன் இலங்கையின் எல்லாக் குடிமக்களுக்குமான நியாயமான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கை அரசு, ஐ.நா மற்றும் அனைத்துலக சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதிலும் உறுதியாக இருக்கிறது.

அமெரிக்க காங்கிரஸ் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இலங்கையில் அண்மைய மோதல்களின்போது இடம்பெற்ற, அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டமீறல்கள் குறித்து 2009 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இரண்டு அறிக்கைகளை தயாரித்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது என்பதை இந்த 2 அறிக்கைகளிலும் (20ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட மக்கள் போராட்ட இயக்க உறுப்பினர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரை தேடித்தருமாறு கோரி அவர்களது குடும்ப உறவினர்கள், கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டின் பின் ஊடகவியலாளர்களின் முன் கதறி அழும் அன்னை.

### முஸ்லிம்களையும் கவனியுங்கள்

#### 70 புத்திஜீவிகள் கூட்டாகக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தமிழர் தலைமைகளும் தமிழ் சிவில் சமூகமும், முஸ்லிம்களை ஒன்றிணைத்துச் செல்ல வேண்டும் என்றும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களைமீண்டும்யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கள் வாழ்வைத் தொடங்க உதவ வேண்டும் என்றும் சுமார் 70 புத்திஜீவிகள் கையொப்பமிட்டு கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசும் தீர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்திவரும் பின்னணியில் இந்த அறிக்கை வந்திருக்கிறது.

இந்த அறிக்கையின் காலப் பின்னணி குறித்து அதில் கையொப்பமிட்டவர்களில் ஒருவரான, நிர்மலா ராஜசிங்கம் பேசுகையில், தமிழர்கள் தாம் பெரும்பான்மை இனத்திடமும் அரசாங்கத்திடமும் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அதனை தம் மத்தியில் வாழும் சிறுபான்மை சமூகங்களுக்கு வழங்க அவர்கள் தயாராக இல்லை.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இன்னமும் போதிய உதவிகள் அரசாங்கத்தில் இருந்து கிடைக்கவில்லை என்கின்ற போதிலும், அவர்களுக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. ஆனால், முஸ்லிம்கள் அந்த சிந்தனை வட்டத்திலேயே இல்லை என அவர் குறிப்பிட்டார். (எ-11)

### வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கும் சொந்தமானது



(அம்பாறை)

வடக்குக் கிழக்கு மாகாணம் முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமானது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இவ்வகையில் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கியே எமது அரசியல் தீர்வு அமையும். அப்பொழுது தான் வடக்குக் கிழக்கு இணைப்பு என்பது சாத்தியமானது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப்பின் செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேச சபையில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன் (20ஆம் பக்கம் பார்க்க)

### அரசியற் தலையீடுகள் அற்ற விசாரணையே உண்மையானது

#### ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஓரளவிற்கேனும் ஒப்புக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளை நம்பமுடியாது, அவர்கள் நடத்தும் விசாரணைகளில் அரசியல்வாதிகள் தலையீடு செய்வதாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் துறையில் சிறந்த நேர்மையான அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர். எனினும், அவர்கள் சுயாதீனமான இயங்குவதற்கு தேவையான பின்னணி ஏற்படுத்தப்படவில்லை.

அரசியல் தலையீடு இல்லாத (20ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி மகிந்த பாக். பயணம்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாத முற்பகுதியில் பாகிஸ்தானுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி 2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்துக்குப் பதிலாகவே மகிந்த ராஜபக்ஷவின் இந்த விஜயம் இடம்பெறவிருக்கின்றது.

வெளிவிவகார அமைச்சு தகவல்களின்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்த விஜயம் பெப்ரவரி 8ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை (20ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை திரும்ப இலவச ஆவணம்

தமிழ்நாட்டிலுள்ள இலங்கை அகதிகள் நாடுதிரும்புவதற்கு தேவையான பயண ஆவணங்களை வழங்கும் போது கட்டணம் அறவிட தேவையில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள்து.

90 ஆயிரம் இலங்கையர்கள் இன்னும் தமிழ்நாட்டிலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ளர் என நம்பப்படுகின்றது இவர்கள் நாட்டுக்கு திரும்புவதற்கு தேவையான பயண ஆவணங்களை சென்னையிலுள்ள பிரதி இலங்கை உயர்ஸ்தானிகராலயமே வழங்க வேண்டும்.

இந்த (20ஆம் பக்கம் பார்க்க)

### ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துவதில் சிக்கல் நிலை

#### அமைச்சர் ஹெகலிய திட்டவட்டம்



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடாமல் அரசாங்கத்தினால் முழுமையாக அமுல்படுத்த முடியாது.

இது அரசாங்கம் எதிர்நோக்கும் சிக்கலான நிலை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறினார்.

ஆணைக்குழுவின் சிபார்சுகள் தொடர்பாக மதத் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கள் குறித்து கேட்டபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

ஜனநாயகத்தில் பல்வேறு அபிப்பிராயங்கள் வெளியிடப்படலாம். ஆனால், அரசாங்கம் இவ்விடயத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய தரப்பினருடன் செயலாற்ற வேண்டும்.

இது அரசாங்கத்துக்கு உள்ள ஒரு சிக்கலான நிலைமை.

ஆனால் அரசாங்கம் இதுகுறித்து அரசியல் கட்சிகளுடனும் ஏனைய தரப்பினருடனும் தொடர்பு கொள்ளவுள்ளது.

எல்லாத் தரப்பினதும் இணக்கப்பாட்டுடன் தான் இந்தப் பரிந்துரைகள் நடை முறைப்படுத்தப் படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (எ-5)

### கனடாவிலும் புலிகளின் முத்திரை

தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட தபர்ல் முத்திரை கனடாவிலும் அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது தமிழீழ விடுதலைப் புலிகளினால் கோரப்பட்ட தமிழீழ வரைபடத்தை தாங்கிய தபால் முத்திரைகள் கனடாவில் பயன்படுத்தப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவின் ஒட்டோவாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ஓர் இலங்கை அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. கனடாவிற்கான இலங்கை ஐக்கிய தேசிய ஒன்றியம் என்ற அமைப்பு இந்தக் குற்றச்சாட்டை முன் (20ஆம் பக்கம் பார்க்க)

## உரிய நேரத்தில் அம்புலன்ஸ் சேவையில்லை கிளிநொச்சியில் நோயாளர்கள் அவலம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிவைத்தியசாலையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கான அம்புலன்ஸ் சேவை உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லையெனசுட்டிக்காட்டப்பட்டுள்து.

இதனால் அவசர சிகிச்சைப் பெறும் நோயாளர்கள் மரணிக்கும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடும் வைத்தியர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோயாளிகளை உடனடியான அம்புலன்ஸ்மூலம் அனுப்பி வைக்குமாறு பணிக்கின்றனர்.

ஆனால் குறிப்பிடப்பட்ட தொகையிலான நோயாளர்கள் சேர்ந்ததன் பின்னரே அங்கியிருந்து அம்புலன்ஸ் புறப்படுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனால் அவசர நோயாளர்கள் உயிரிழக்கும் சம்பவங்களும் நடந்துள்ளன.

இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து நோயாளர்களின் உயிரைக்காக்க உதவுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)


### மணமகன் தேவை

அமெரிக்காவில் பிரஜா உரிமை உள்ள ARCHITECTURE ஆக வேலை செய்யும் பெண்ணுக்கு Engineer, Accountant மணமகன் தேவை, ஆண்டு 1983 அனுச நட்சத்திரம்.

தொடர்புக்கு : 0774005931 (அ-5461)


## ஒரு மாதகாலத்துக்கு விரிவுரைகள் பிற்போடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக பிரயோக விஞ்ஞான பீடத்தின் விரிவுரைகள் யாவும் ஒரு மாத காலத்துக்கு பிற்போடப்பட்டிருப்பதாக வளாக முதல்வர் பேராசிரியர் இ.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

விரிவுரைகள் யாவும் மீண்டும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அவர் கூறினார். (எ-11)


'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர் (7239)


## பாம்பு கடித்து குடும்பஸ்தர் மரணம்

(கிளிநொச்சி)

பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றுக்காலை யாழ். போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

இதில் பிரமந்தனாற்றைச் சேர்ந்த துரைராஜா விக்கினேஸ்வரன் (வயது 40) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த 4ஆம் திகதி பாம்புக் கடிக்கு இலக்கான பிரஸ்தாப குடும்பஸ்தர் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிக்கிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்றுக் காலை அவர் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவருவதில் ஏற்பட்ட தாமதமே அவரின் உயிரிழப்புக்கு காரணம் என குற்றம் சாட்டப்பட்டது. (எ)


### ஜனவரி 21, 22 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சைக்கான (SLAS) வழிப்படுத்தல் விரிவுரைகள்

ஆரம்பம் : 08/01/2012 ஞாயிறு
இடம் : புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
நேரம் : பி.ப 1.00 மணிமுதல் 5.00 மணிவரை (உங்கள் வசதிக்கேற்ப நேர அட்டவணை வழங்கப்படும்)
பொது அறிவு : வே. தபேந்திரன்
பொது உளச்சார்பு : ரி.தர்மேந்திரா
முகாமைத்துவ உளச்சார்பு : விரிவுரையாளர்
கட்டுரையும் சுருக்கமும் : விரிவுரையாளர்.

- பல்லூடக எறிகருவி மூலம் விளக்கப்பட்டங்களாக கற்பிக்கப்படும்.
- மாதிரி வினாவிடைகள், அச்சடித்த பாடக்குறிப்புக்கள் வழங்கப்படும்
- மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும்.

ஒழுங்கமைப்பு : ஆறுதல், இலங்கை (அ-5459)


## கல்வியங்காட்டில் விபத்து சிகிச்சை பலனின்றி வயோதிபர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் எரிகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

கைதடி, நாவற்குழியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான கந்தையா மனோகரன் (வயது 62) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதியன்று கல்வியங்காட்டில் உள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருளை நிரப்பியபோது மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு மோட்டார் சைக்கிள்களும் எரிந்து நாசமானதுடன் அதனை செலுத்திய இவரும் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)


'கற்பவை கற்க; கற்பவை, கசடறக்கற்க'
YAALH ENGLISH ACADEMY
(நிறுவுநர் + ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்)
வழங்கும்
PRACTICAL ENGLISH COURSES

- ஆசிரியர்க்கு
- உத்தியோகத்தர்க்கு
- உயர்கல்வி மாணவர்க்கு
- A/L படித்தவர்க்கு
- தாய்மார்க்கு : உங்கள் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் பெரும் பயன்.

ஆரம்பம் : 21.01.2012 / இலவசம் : முதலிரு வகுப்புக்கள்
முழுவிபரங்கள் பெற + பெயர் பதிவு செய்ய : 0773212711
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்நகர் (7238)

Piano , Violin Notes '
Organ,Guitar, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான பயிற்சி வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. 300 சினிமாப் பாடல்களுக்கான Notesஉம் வீட்டில் இருந்தவாறே Organ,Guitar பழகுவதற்கான பயிற்சி புத்தகங்களும் விற்பனைக்குண்டு.
சுரவீணா இசைமன்றம்
18/1(4), செட்டித்தெரு ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P.: 0777031293 (7072)

பட்டதாரி ஆக முடியவில்லை என்ற கவலையா?
பட்டம் பெற்றாலும் வேலைவாய்ப்பு தொடர்பான சிந்தனையா?
முழுநேர ஆங்கிலகற்கைநெறி ஒன்றை தெரிவு செய்யும் ஆர்வமா?

ஆம் உங்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்

- அங்கீகரிக்கப்பட்ட உலகத்தரம் வாய்ந்த பல்கலைகழகத்தின் உள்வாரிப்பட்டப் படிப்பினை (Internal degree) விரும்பிய துறையில் பெறும் வாய்ப்பு

bucks new university — முகாமைத்துவ துறை Business Management
UNIVERSITY OF WOLVERHAMPTON — மென்பொருள் துறை Software Development

- கல்வி கற்கும் போதே உறுதி செய்யப்படும் வேலைவாய்ப்பு
- தனித்துவமான கவனம்
- பல்கலைகழக மற்றும் உயர்தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தரம் வாய்ந்த ஆசிரியர்களின் வருகை விரிவுரைகள் மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் வழிகாட்டல்கள்

ஆங்கிலத்தைக் கற்ப[illegible]ற்கு ஆங்கிலத்தை 6 மாதம் கற்றால் போதாது அதனை தொடர்ச்சியாக தக்கவைக்க தகுந்த [illegible]சூழல் மற்றும் கற்கைகள் அவசியம். அத்தகைய கற்கைநெறி

உயர் தேசிய பட்டயக் கல்வி

Higher National Diploma

புதிய பிரிவுகள் இப்போது IDM சாவகச்சேரியில் ஆரம்பம். கற்க விரும்புபவர்கள் 15/01/2012 ற்கு முன்பாக 0777666175 என்ற இலக்கத்திற்கு HND இடைவெளி உங்கள் பெயர் முகவரி e-mail என்பவற்றை குறுஞ்செய்தி அனுப்பவும். குறுஞ்செய்தியில் குறிக்கப்பட்ட முகவரிக்கு மற்றும் e-mail என்பவற்றிற்கு விண்ணப்பபடிவங்கள் அனுப்பி வைக்கப்படும்.

* Facebook இல் பெறவிரும்புபவர்கள் www.facebook.com/IDMCHAVACAMPUS என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளாம்.

Like us on Facebook www.facebook.com/IDMCHAVACAMPUS

## இன்று ஒரு தகவல்

# வேதாந்த விளக்கம்

ஒரு பெரியவர் புகையிரத வண்டியிலே பிரயாணம் செய்து கொண்டிருந்தார்.

அவரின் கையிலே இருந்த கைப்பையினுள்ளே நிறைய பணம் இருந்தது.

அந்தப் பெரியவர் பிரயாணக் களைப்பினால் கண்ணை சற்று மூட ஆரம்பித்தார்.

சமயம் பார்த்து களவாட எதிர்பார்த்து கொண்டிருந்த ஒருவன் மெதுவாக அவரருகில் வந்து அந்த கைப்பையை களவாடிக் கொண்டு போனான். அவன் முழுமையாக அவ்விடத்தை விட்டு செல்வதற்குள் அருகில் இருந்தவர் அதைப் பார்த்து விட்டார். உடனே சத்தம் செய்தார். பெரியவர் விழித்துக் கொண்டார்.

உடனே எழுந்து ஓடி அந்த ஆசாமி மேலே பாய்ந்து கைப்பையை மீட்டுக் கொண்டு வந்து அவரது இருக்கையில் நிம்மதியாக அமர்ந்தார். அந்த ஆசாமிக்கு கொடுக்க வேண்டிய அடி அனைத்தையும் ஏனையவர்கள் பார்த்துக் கொண்டார்கள்.

இதுதான் இயல்பு.அந்தப் பெரியவர் ''பணப் பையை தானே எடுத்துக் கொண்டு போகிறான். போனால் போகட்டும் அவனும் நானும் மனிதன் தானே அப்படியென்று வேதாந்தம் பேசமாட்டார்.

அப்படி பேசினால் ,அவர் வேதாந்தத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்பது அர்த்தம்.

இதை விளங்கிக் கொள்வதென்பது பற்றி ஸ்ரீராம கிருஷ்ணரே ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

ஒரு காட்டிலே சாது இருந்தார். அவருக்கு பல சீடர்கள் இருந்தார்கள்.ஒரு நாள் அவர்களை அழைத்து அமர வைத்து உபதேசம் செய்தார்.

அப்போது அவர், ''இந்த உலகத்திலே இருப்பவையெல்லாம் கடவுளுடைய சாயலாக படைக்கப்பட்டவை. அதை நீங்கள் எல்லோரும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். அப்படி எல்லோரையும் அறிந்து நடந்தால் சாதகமாக வாழப் பழகலாம்'' என்று கூறினார்.

சீடர்கள் எல்லோரும் மிகவும் அக்கறையாக அதை மனதிலேயும் காதிலேயும் வாங்கிக் கொண்டார்க்ள்.

ஒரு நாள் ஒரு சீடன் விறகு வெட்டுவதற்காக காட்டுக்குப் போனான். அவனுக்கு எதற்கு விறகு? ஹோமம் வளர்ப்பதற்கு தேவைப்பட்டது. அவன் நடுக்காட்டு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்திலே திடீரென ஒரு சத்தம் அவனது காதினில் ஒலித்தது. யாரோ ஒருவர் உரத்த தொனியில் சொல்கிறார்.

“யார் எங்கேயிருந்தாலும் ஓடிச் சென்று விடுங்கள்... மதம் கொண்ட யானை ஒன்று வந்து கொண்டிருக்கிறது'' என்று யாரோ கத்தினான். அதைக் கேட்டதும் அங்கே நின்றவர்கள் ஆளுக்கு ஒரு பக்கமாக ஓட ஆரம்பித்தார்கள்.

சிலர் கிடுகிடுவென்று மரத்திலே ஏறி உட்காரத் தொடங்கினார்கள்.

ஆனால், சீடன் மட்டும்நகரவேயில்லை!

''நான் எதற்காக ஓட வேண்டும்?நானும் கடவுள் தானே. இந்த யானையும் கடவுள்'' என்று மனதில் நினத்துக் கொண்டு அந்த இடத்திலேயே அப்படி அசையாமல் நின்றான்.

யானை சற்று தூரத்திலே வந்தது. இவன் அசையவேயில்லை. இருந்த இடத்திலேயே அப்படியே கையிரண்டையும் மேலே தூக்கிக் கொண்டு துதிப்பாடல் ஒன்றை பாட ஆரம்பித்தான்.யானையின் மேல் இருந்தவனோ “ஓடிப் போய்விடு! ஓடிப் போய்விடு!'' என்று உரத்த குரலில் கத்தினான். அந்தச் சீடனுக்கு இவனது சத்தம் பெரிதாகத் தெரியவில்லை.அவன் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

இவன் அந்த யானையை கடவுளாக நினைக்கலாம். ஆனால், அந்த யானை இவனை கடவுளாக நினைக்க வேண்டுமே.

இவன் கை இரண்டையும் மேலே தூக்கிக் கொண்டிருந்தான். அதற்கு மிகவும் வசதியாக அமைந்தது. அப்படியே தும்பிக்கையால் ஒரு சுருட்டி வளைத்து ஒரு பக்கமாக அப்படி எறிந்தது.

“அம்மா என்று கத்திக்கொண்டு போய் விழுந்தான். பலமான காயம். ஆசிரமத்திலே இருந்தவர்கள் உடனே ஓடி வந்தார்கள். அவனை தூக்கிக் கொண்டு போய் ஆசிரமத்திலே போட்டார்கள். இவன் மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தான். அப்போது அங்கே இருந்த சீடன் இவனைப் பார்த்து யானை வந்ததுதான் உனக்குத் தெரியுமே! நீ ஏன் அங்கேயிருந்து ஓடவில்லை?'' என்று கேட்டான்.

“உலகத்திலே இருக்கும் படைப்புக்கள் எல்லாம் கடவுளின் சாயலானவை என்று குருதேவர் நமக்கு போதனை செய்தார். அப்படித்தானே. அதனால் யானையைப் பார்த்ததும் கடவுள்தான் வருகிறார்'' என்று மனதில் நினைத்துக் கொண்டேன் என்றான்.

குருநாதர் இவன் கூறியதைக் கேட்டுக்கொண்டே அங்கே வந்தார். அப்போது அவர், சொன்னார்;

அதுசரி, நீயும் கடவுள்தான்; யானையும் கடவுள்தான். ஆனால், யானை மேலே ஏறி இருப்பவனும் கடவுள்தானே. அந்தக் கடவுள் “ஓடித்தப்பு”என்று எச்சரிக்கை செய்ததே. அந்த வார்த்தையிலே உனக்கு ஏன் நம்பிக்கை வரவில்லை? என்று கேட்டார்.

சீடன் ''திருதிரு'' வென்று முழிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது தான் செய்தது பிழையென்பது.

வேதாந்தத்தை சரியாகப் புரிந்து கொள்ளாதபடியால் வந்த விளைவுதான் இது! வேதாந்திகள் மாதிரி இருக்கிற சிலபேரையும் இந்தக் காலத்திலே சரியாகப் புரிந்து இருக்க வேண்டியிருக்கும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வன்னிப் பகுதியில் சட்டவிரோத செயல்கள் அதிகரிப்பு; தடுக்கும் முயற்சியில் பொலிஸார்

வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிகரித்து வரும் சட்டவிரோத செயற்பாடுகளால் மக்கள் பல அச்சத்துடனும் பல இடர்பாடுகளுடனும் வாழ்கின்ற நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, சட்ட விரோதமாக கசிப்பு காய்சுவது, களவாக பெறுமதிமிக்க மரங்களை வெட்டி கடத்துவது, அனுமதிப் பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்வது, களவாக அனுமதியின்றி இறைச்சிக்காக கால்நடைகளை கடத்துவது என பலதரப்பட்ட சமூக பாதிப்பு குற்றச் செயல்களால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

அண்மையில் மாங்குளம், மல்லாவி, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் உள்ள பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் பலர் சிக்கிக் கொண்டனர்.

மாங்குளத்தில் அனுமதியின்றி சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த பலர் மாங்குள பொலிஸாரால் ஷைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து இயக்கச்சி ஊடாக மல்லாவி நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் பேருந்து ஒன்று பயணிகள் இல்லாமையால் இயக்கச்சி பகுதியில் இருந்த கால் நடைகளின் கால்களைக் கட்டி பேருந்தில் கடத்திய போது மாங்குளத்தில் பொலிஸாரால் பிடிக்கப்பட்டனர்.

பேருந்தையும் சாரதியையும் நடத்துநரையும் கைது செய்த பொலிஸார் மாங்குள பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்ததுடன் முல்லை. மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதேபோன்று மல்லாவியில் கசிப்பு உற்பத்தி செய்தவர்களும் மரங்களை களவாக கடத்தியவர்களும் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர்.

ஒட்டுசுட்டானில் இதே போன்ற பல குற்றச் செயல்களுக்காகவும் பலர் ஷைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி குற்றங்களுக்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் தடுத்து நிறுவத்துவதற்காக பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்த போதும் இக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுவதால் பொதுமக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய அவல நிலை உள்ளது.

(அ-3-15)

## யாழ்.மாவட்டத்தில்

# 20 வயதிற்குட்பட்ட 89 விதவைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 20 வயதுக்குட்பட்ட 89 விதவைகள் உள்ளனர் என யாழ்.மாவட்ட செயலகத்தினால் வெளியிடப்பட்ட கடந்த வருடத்திற்கான இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

29 ஆயிரத்து 742 விதவைகள் யாழ்.குடாநாட்டிலுள்ளதாகவும் அதில் 89 விதவைகள் 20 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் கடந்த கால யுத்தத்தமே இத்தகைய இளம் விதவைகளின் அதிகரிப்புக்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 55 | 60-100 | 60 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 190 |
| தக்காளி | 150-160 | 240 | 190 |
| மரவள்ளிக் கிழங்கு | 25-30 | 30 | 30 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 100 | 120 | 120 |
| பூசணி | 50 | 60 | 70 |
| புடோல் | 65 | 90 | 60 |
| வாழைக்காய் | 45-50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 70 |
| பாகற்காய் | 120 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 70 |
| பயற்றங்காய் | 150 | 160 | 200 |
| லீக்ஸ் | 50 | 100 | 70 |
| பீற்றூட் | -- | 120 | 100 |
| கறிமிளகாய் | 180 | 200 | 230 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 80 | 80 | -- |
| கத்தரிதம்புள்ள | 50-70 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 20 |
| தேசிக்காய் | 70-80 | 60 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 30 | 25 |

## இராசி பலன்

*07.01.2012*
*(மார்கழி 22,சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு*
*திரயோதசி பிற்பகல் 12.26 மணிவரை*
*மிருகசீரிடம் பின்னிரவு 4.35 மணிவரை*
*இராகுகாலம் 9.32-11.02 மணிவரை*
*சுபநேரம் 3.32-5.02 மணிவரை*
*இரவு நடேசர் ஆருத்திராபிஷேகம்.*

**மேடம்** நினைத்த காரியத்தை முடித்து நிம்மதி காணும் நாள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**இடபம்** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பணத்தேவைகள் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது, ஊர்மாற்றம் செல்லும் எண்ணத்தை தவிர்பீர்கள், திருமால் வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கடகம்** கலகலப்பான சூழ்நிலை அமையும், கௌரவம், அந்தஸ்து உயர்வடையும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகை வந்து சேரும், வருமானம் திருப்தி தரும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** தொட்ட காரியம் துளிர்விடும் நாள்,உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர்,பம்பரமாகச் சுழன்று பணி புரிந்து பாராட்டுப் பெறுவீர்கள், வெளியூர் தொடர்புகள் விரிவடையும்.

**கன்னி** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தந்தை வழியில் தனவரவுகள் ஏற்படலாம்,புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்,மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்** வரவும் செலவும் சமமாகும் நாள், வாழ்க்கைத்துணை வழியே விட்டுக் கொடுத்து நடப்பது நல்லது, கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு தேவை.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உற்சாகமடையும் நாள்,தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்,கூட்டாளிகள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக செயற்படுவர், மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள்.

**மகரம்** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்,செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும்,உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்,கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கும்பம்** புண்ணிய கருமங்களுக்கு செலவு செய்து மகிழும் நாள்,அஞ்சல் வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**மீனம்** உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய பிணக்குகள் முடிவுக்கு வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், இல்லத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவர்.

வளவன்

# நீண்டகால யுத்தத்தினால் இளையோர் தொழில்வாய்ப்புகளை இழந்துள்ளனர்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் இடம்பெற்ற நீண்டகால யுத்தத்தினால் பலவிதமான பாதிப்புகளுக்குள்ளானதோடு மட்டுமல்லாது தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் பல இளைஞர் யுவதிகள் யாழ். குடாநாட்டில் உள்ளனர் என யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

சர்வோதயம் நிறுவனத்தின் யாழ். அலுவலகம் மற்றும் பல பலநோக்கு சமூக மையம் அடங்கிய கட்டடத் தொகுதி நேற்று கொழும்புத்துறையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வோதய நிறுவனத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. இந்நிறுவனத்தினர் கடந்தகாலங்களில் சாதி, மத, இன, மொழி பேதமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வந்தனர்.

வவுனியாவில் பிரதேசசெயலராக இருந்தபோதும் முல்லைத்தீவு அரசாங்க அதிபராக இருந்தபோதும் இந்த நிறுவனத்தினர் பல உதவிகளை மக்களுக்கு வழங்கியதை நான் அறிவேன்.

குறிப்பாக சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகளை வழங்கியிருந்தனர்.

அத்தோடு இந்நிறுவனத்திடமிருந்து பல்வேறு உதவிகளைப் பெற்று மக்களுக்கு நான் வழங்கியுள்ளேன், மேலும் கடந்தகால யுத்தத்தினால் பல இளைஞர், யுவதிகள் பாதிக்கப்பட்டதோடு இன்றும் தொழில்வாய்ப்புக்கள் இன்றி பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தொழில்வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு உதவிகள் வழங்கி பொருளாதார ரீதியில் அவர்களை முன்னேற்ற அனைவரும் முன்வர வேண்டும்.

மேலும் சர்வோதய நிறுவனத்தின் பணி யாழ். குடாநாட்டில் தொடர்ந்து நடைபெற வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்நிகழ்வில் சர்வோதய நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமான கலாநிதி ஏ.ரி.ஆரியரத்தினா, யாழ். மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள், மத குருமார்கள்,

## கவிதை நூல் வெளியீட்டுவிழா

யாழ்.இலக்கிய குவியத்தின் நாம் பேஸ்புக் கவிதைகள் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கவிஞர் வேலணையூர் தாஸ் தலைமையில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலைய பணிப்பாளர் தே. தேவானந், சிறப்பு விருந்தினராக சிகரம் ஊடக இல்ல பணிப்பாளர் கோ. றுசாங்கன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் அறிமுக உரையினை நெடுந்தீவு முகிலனும் வெளியீட்டுரையை கலாசார உத்தியோகத்தர் குறஜீபனும் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியினை நடனமுருகன் வைத்திய நிலைய டாக்டர் க. நவரத்தினம் பெறவுள்ளார்.

இந்நிகழ்வின் போது இணையத்தளங்களையும் சமூக வலைத்தளங்களையும் இலக்கிய வளர்ச்சிக்கும் சமூகநலத்திட்டங்களுக்கும் பயன்படுத்தல் என்னும் விடயம் பற்றி கலந்துரையடப்படவுள்ளது எனவும் யாழ். இலக்கிய குவியம் அறிவித்துள்ளது. (அ)




## பிரதிக்கல்விப்பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தில் கடமை நிறைவேற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகவுள்ளது என வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்பதவிக்கு 3 வருடமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையையுடைய இலங்கை அதிபர் சேவை வகுப்பு I,2- I சேர்ந்தவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இ.அ.சே.I இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே இ.அ.சே. 2-I ஐச் சேர்ந்தவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இப்பதவிக்கு யாழ்.மாவட்ட பாடசாலையை சேர்ந்தவர்களே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை வலயக்கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## முஸ்லிம் ஆசிரிய உதவியாளர்களை மீண்டும் வடமாகாணத்திற்கு இணைத்தல்

(யாழ்ப்பாணம்)

2007.07.11ஆம் திகதிய அமைச்சரவைப் பத்திரம் மூலம் அனுமதிக்கப்பட்டு வடமாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட வடமாகாணத்தில் வசித்து தற்பொழுது இடம்பெயர்ந்து ஏனைய மாகாணங்களில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற முஸ்லிம் ஆசிரியர்களை எதிர்வரும் முதலாம் தவணை ஆரம்பத்தில் வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையைப்பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை உதவியாளர்கள் விண்ணப்பப்படிவத்தினை அனுப்பிவைக்காதவர்கள் தற்போது கடமையாற்றிக்கொண்டிருக்கும் வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுப் பூரணப்படுத்தி செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வடக்கு மாகாணத்தின் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (அ-1)

## இலவச யோகா கலை பயிற்சிநெறி அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இலவச யோகா கலை பயிற்சி நெறியின் அறிமுகவிழா-2012 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இந்து கலாசார உத்தியோகத்தர் உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வின் போது யோகா பற்றிய அறிமுகவுரையினை யோகா போதனாசிரியர் எஸ்.உமாசுதனும் இன்றைய காலகட்டத்திற்கு யோகா கலையின் அவசியம் எனும் கருத்துரையினை கலாசார மறுமலர்ச்சி நூலாசிரியர் ரி.சபாலிங்கமும் ஆற்றவுள்ளார்கள்.

இப்பயிற்சி நெறி பற்றிய விபரங்களுக்கு 0212223893 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளமுடியும் பயிற்சிநெறியில் இணைய விரும்புவர்கள் அறிமுக விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயதயான் அறிவித்துள்ளார். (அ)

## பொங்கல் விழாவில் மரதன் ஓட்டப்போட்டி

(கரவெட்டி)

உழவர் திருநாளை முன்னிட்டு மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட வீரர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாலுசந்தியில் இருந்து ஆரம்பமாகி நாவலடி ஓராங்கட்டை, மந்திகை, கல்லிகை, நெல்லியடிச் சந்தி ஊடாக மாலுசந்தியை வந்தடைந்து நிறைவடையவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ள வீரர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்திடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அன்றைய தினம் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு போட்டியில் பங்குபற்ற முடியும் என மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (அ-3-24)

## மலர் வெளியீட்டு விழா

யாழ். சுண்டுக்குழி கொய்யாத்தோட்டம் புதுவீதி அருள்மிகு ஸ்ரீ ஞானசெல்வ விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேக மலர் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஆலய தேவஸ்தான மண்டபத்தில் சமாதான நீதவான் கோ. தியாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந்நூல் வெளியீட்டுவிழாவிற்கான ஆசியுரையினை இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் ஆற்றவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையினை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், நூல் அறிமுக உரையினை சிலாபம் முன்னேஸ்வர தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ ச.பத்மநாபசர்மா ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (அ)

## மின்தடை அறிவிப்பு

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டி இருப்பதனால் குறிப்பிட்ட பிரதேசங்களில் மின் தடைப்படும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவ பீடபிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின்தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சமூகமட்ட நிறுவனங்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடல்

(கரவெட்டி)

சமூகமட்ட நிறுவனங்களின் கலந்துரையாடல் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு அல்வாய் தெற்கு கிராம அலுவலர் ரி.வரதராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் தலைவர் டொ.வியாகேசு கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே அல்வாய் தெற்கிற்கு உட்பட்ட கிராமத்தை அபிவிருத்தி செய்யும் சனசமூக நிலையங்கள், விளையாட்டு கழகங்கள், கிராம அபிவிருத்திச்சபை, கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என 25 இற்கு மேற்பட்ட அமைப்புக்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளன.

இக்கிராமத்தின் அபிவிருத்திக்கான மேம்பாடுகள் தொடர்பாக இவ் அமைப்புக்கள் ஆராயவுள்ளன. (அ-3-24)

## சஞ்சிகை வெளியீடு

(கொழும்புத்துறை)

சுகவாழ்வு நிலையம் நடத்தும் தேடும் சிட்டுக்கள் சிறுவர் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் சுகவாழ்வு நிலைய இயக்குநர் அருட்தந்தை மி.செபமாலை பெரேரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமலமரித்தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்தந்தை ம.போல் நட்சத்திரம், சிறப்பு விருந்தினர்களாக தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமதி திருமகள் சிவசங்கர், வளர்பிறை இயக்குநர் அருட்சகோதரி றி.இராசையா, சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் திருமதி சைலயா ஜெகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-51)

# கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த பணிப்பு

## கிளி.மாவட்ட நீதிபதி – பெ.சிவகுமார்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் கசிப்பு, கள்ளச் சாராயம் விற்பனை மற்றும் உற்பத்தி செய்பவர்களை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளதுடன் திட்டமிட்டு கைதுசெய்யும் நடவடிக்கைகளை நிறுத்துமாறும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மதுவரி திணைக்களம் நேற்று முன்தினம் வயது குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த15 வர்த்தகர்களை நீதிமன்றின் நிறுத்தியுள்ளனர். குறித்த வழக்கை விசாரணை செய்த போது மதுவரித்திணைக்களம் 18 வயதுடைய வயது கூடிய தோற்றம் கொண்ட ஒருவரை வர்த்தக நிலையத்தில் பணத்தை வழங்கி சிகரெட் வாங்கி வருமாறு கூறியதுடன் சிகரெட் இல்லாத கடைகளில் பீடி வாங்குமாறும் கூறி அவ்வாறு விற்பனை செய்தவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இதனை கேட்டறிந்த கிளிநொச்சி நீதிபதி பெ.சிவகுமார் சிகரெட் விற்பனை செய்த வர்த்தகர்களை எச்சரிக்கை செய்து விடுவித்ததுடன் மதுவரி திணைக்களத்தினர் திட்டமிட்டு கைது செய்யும் நடவடிக்கைகளை கைவிட்டு சட்ட விரோதமாக கசிப்பு காச்சுபவர்களையும் கள்ளச்சாராயம் விற்பனை செய்பவர்களையும் கைதுசெய்யவும் கட்டுப்படுத்தவும் உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடும் உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ-2)

# விசேட கல்வி மாணவர்களுக்கான கல்வியை புறந்தள்ள முடியாது

## ஹற்றன் விசேட கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்

மாணவர்களின் கற்றல் நடவடிக்கையில் பாகுபாடு காட்டப்பட்டால் அது அவர்களின் ஆளுமை விருத்தியடைவதைப் பாதிக்கும் என ஹற்றன் விசேட கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சாந்திடோசன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கல்விப் பகுதியில் விசேட கல்வி தொடர்பான கருத்தரங்கொன்று அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், மாணவர்களுடைய குறிப்பாக விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியினை மேம்படுத்துவது அவசியமானதொன்றாகும். கல்வியினால் தான் சமூகத்தில் அவர்களால் உயர்ந்து நிற்க முடியும்.

பெரும்பான்மை இனத்தவர்கள் விசேட கல்வி தொடர்பாக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி அதில் வெற்றியும் கண்டு வருகின்றனர்.

கடந்த 1912 ஆம் ஆண்டு விசேட கல்வித் திட்டம் தென்பகுதியில் இரத்மலானையில் அமுல்படுத்தப்பட்டது. அதே கல்வித் திட்டம் 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வட மாகாணத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதிலும் 2005 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டது. விசேட கல்வி தொடர்பில் நாம் எவ்வளவு பின் தங்கியுள்ளோம் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இவ் விசேட கல்வி தேவையுடைய மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகம் செல்கின்றனர். அதேபோல் க.பொ.த. சாதாரண பரீட்சையிலும் சித்தி எய்துகின்றனர். ஆதலால் நாம் அவர்களை ஊக்கப்படுத்தாமல் இருக்க முடியாது.

இப் பொறுப்பு பாடசாலைக்குத்தான் என நாம் புறந்தள்ள முடியாது. சமூகத்திலுள்ள அனைத்து மட்டத்தினருக்கும் இப் பாரிய பொறுப்புள்ளது.

விசேட கல்வி தேவையுடைய மாணவர்களாக பார்வையில் குறைபாடு, கேட்டல் குறைபாடு, நுண்ணறிவுகளில் இயலாமை போன்ற பதின்மூன்று காரணங்களை உடைய 13 வகையானவர்கள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக 13 வகையான கற்பித்தல் முறைகள் உள்ளன.

இக்கல்வியினை பெறுவோர் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் அவசியமானதாகும்.

இன்றைய கால கட்டத்தில் பாடசாலைக்கு வருகின்ற அனைத்து மாணவர்களையும் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும் என்கின்ற முறை காணப்படுகின்றது. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு என்னால் கற்பிக்க இயலாது என்று எவரும் புறந்தள்ள முடியாது.

விசேட கல்வி கற்க வேண்டிய மாணவர்கள் தொடர்பாக விசேட வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

இவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுத்து ஏனைய மாணவர்களைப் போல் இவர்களையும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். இராமநாதன் கல்லூரியில் இவ்வாறு மாணவர்கள் ஏனைய சக மாணவர்களோடு பொதுவான வகுப்பறையில் கல்வி கற்கின்றனர். இது வொரு வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதேபோல் யாழ். பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பாடசாலைகளிலும் இவ்வாறான ஒற்றுமை ஏற்படுத்தல் வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2-4)

# நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சினால் விண்ணப்பம் கோரல்


(கொழும்பு)

நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சினால் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கான பொறியியல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரியின் விண்ணப்ப தகைமைகளாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் கணிதம், ஆங்கிலமொழி, விஞ்ஞானம் அடங்கலாக 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் 2 அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தலுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் தூய கணிதம் உட்பட 4 பாடங்களிலோ புதிய பாடத்திட்டத்திட்டமாயின் இணைந்த கணிதம், பௌதீகவியல் உள்ளடங்கலாக 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் கட்டுப்பெத்த பல்கலைக்கழகம் அல்லது ஹாடி தொழில்நுட்பக் கல்லூரிகளிருந்து தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழுடன் உரிய துறையில் ஒருவருட பிரயோகப் பரீட்சையை பூர்த்தி செய்ததுடன் அளவையியல் மட்டமிடல், நீர்ப்பாசனப் பொறியியல் பாடங்களில் சித்தியடைந்தமைக்கான சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது மட்டக்குளி உயர் தொழில்நுட்ப நிறுவனத்திலோ, கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திலோ நீர்ப்பாசனப் பொறியியல் மற்றும் அளவையியல் மட்டமிடல் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய குடிசார் பொறியியல் துறைக்குரிய உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE) சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் கல்விச் சான்றிதழ்கள், பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ், நன்னடத்தைச் சான்றிதழ்கள் -3 என்பவற்றையும் இணைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் உதவியாளர் சேவையின் வகுப்பு II தரம் II எனக் குறிப்பிட்டு ***நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம், இல. 230, பௌத்தலோக மாவத்தை*** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இவ்விண்ணப்பம் கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை வலம்புரிக் காரியாலயத்திலோ நேற்றையதினம் வெளியாகிய வர்த்தமானிப் பத்திரிகையிலோ பார்வையிட முடியும். (அ)



நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் உதய சூரியன் முன்பள்ளியில் நடைபெற்ற போது ஐ.தே.கட்சியின் மானிப்பாய் தொகுதி அமைப்பாளர் முன்பள்ளி நிர்வாகிகளிடம் கற்றல் உபகரணம் வழங்குவதனை படத்தில் காணலாம்.


**அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ–து)**

**பதவி வெற்றிடம்**

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள இலிகிதர் (302/15) பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை சங்க காரியாலயத்தில் 20/= செலுத்தி பெற்றுக் கொள்ளவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவ, பிறப்பத்தாட்சிப்பத்திர சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து பொது முகாமையாளர், அளவெட்டி மல்லாகம் ப.நோ. கூ.சங்கம், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி என்னும் முகவரிக்கு 21.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பதவி:- இலிகிதர் (குறியீட்டு இலக்கம் 302/15)
சம்பளத் திட்டம்:- (66/2006 இன்படி) 9450-11000
75x10 -80x10

**கல்வித் தகைமை:**

அ) கூட்டுறவு வேலையாளர்களினது 16 ஆவது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் 2 வருடத்திற்குக் குறையாக அனுபவம்

அல்லது

ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) இல் கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ எண் கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியும் கூட்டுறவுச் சங்க இலிகிதர் பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும். அத்துடன் கணனி தகைமையும் அறிவும் அவசியம் தேவை.

பொது முகாமையாளர்.

(சி-5458)



**சாவகச்சேரியில்**
20% தள்ளுபடியுடன்
**மாபெரும்**
**மலிவு விற்பனை**

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
பெண்களுக்கான அழகிய சல்வார், சாறி, கொட்டன் சாறிகள்
சிறுவர்களுக்கான ஆடைகள்

**மரியம்'ஸ்**

**பெண்களுக்கான பெருமை மிகுந்த ஆடையகம்**

இடம் : "கலா காமெண்ட்"
16A, கண்டி வீதி, சாவகச்சேரி. (கொமஸியல் வங்கி அருகில்)
திகதி : 01.01.2012-14.01.2012 வரை
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

அநேகரின் வேண்டுகோளிற்கிணங்க தைப்பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
5000/= இற்கு அதிகமாக கொள்முதல் செய்தால்
800/= பெறுமதியான அழகிய With பிளஸ் கொட்டன் சாறி Free

தொடர்புகளுக்கு : 0777140844, 0718034848 (7234)

# இரணைப்பாலையில் மீள்குடியமர்ந்த மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இரணைப்பாலை கிராமத்தில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மீனவர்கள் இன்றிலிருந்து புதுமாத்தளன் ஆழ்கடல் பிரதேசத்தில் 24 மணி நேரமும் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள பாதுகாப்பு படையினர் 15 குதிரை வலுக்கொண்ட இயந்திரத்தை மட்டும் பாவித்து 12 கடல் மைல் தூரத்திற்குள் மட்டும் தொழில் செய்ய வேண்டும் என்று நிபந்தனையும் விதித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இரணைப்பாலைக் கிராமத்தில் கடந்த 24 ஆம் திகதி 320 மீனவ குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டனர்.

கடற்றொழிலையே நம்பி வாழ்ந்து வரும் மீனவர்கள் இத் தொழிலுக்குச் செல்வதற்குப் பாதுகாப்புப் படையினர் அனுமதி மறுத்திருந்தனர். இதனால் இவர்கள் தொழிலின்றி, வருமானமின்றி வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடினார்கள்.

இந்நிலையில் குறித்த பாதுகாப்புப் படையினரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து புதுமாத்தளன் ஆழ்கடல் பரப்பில் இன்றிலிருந்து 24 மணிநேரமும் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கியுள்ள பாதுகாப்புப் படையினர் மீன்பிடி வள்ளங்களில் 15 குதிரை வலுவுடைய இயந்திரங்களைப் பயன்படுத்தி 12 கடல் மைல் தூரத்திற்குள் தொழிலில் ஈடுபட வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளனர்.

பாதுகாப்பு படையினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்வதில் தற்பொழுது மீனவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இதேவேளை, தொழில் அனுமதிகள் நாளை சனிக்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (அ-2)

# பரீட்சை முடிவை இரத்துச் செய்ய கையெழுத்துப் போராட்டம்

(கொழும்பு)

தற்போது வெளியிடப்பட்டுள்ள கல்வி பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளை இரத்துச் செய்து மீண்டும் சரியான பெறுபேறுகளை வெளியிடுமாறு வலியுறுத்த கோரும் கையெழுத்து சேகரிக்கும் போராட்டம் கொழும்பு கோட்டையில் ஆரம்பமானது.

பாடசாலைகளை பாதுகாக்கும் அமைப்பு இதனை ஒழுங்கு செய்திருந்தது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைப்பின் நிறைவேற்று அதிகாரி இந்தமுறை வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளில் மாணவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லை என்று குறிப்பிட்டார்.

இதன் காரணமாக 75 சதவீதமான பரீட்சார்த்திகள் மீள் திருத்தம் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இந்த மீள் திருத்திற்கு பரீட்சைகள் திணைக்களம் பணம் அறவிடுகிறது.

இவ்வாறான ஒரு நிலையில் முறைகேடுகள் நிறைந்த இந்த பெறுபேறுகளை இரத்துச் செய்து மீண்டும் உரிய பெறுபேறுகளை வெளியிட வேண்டும்.

அதனை வலியுறுத்தும் வகையிலேயே இந்த கையெழுத்து சேகரிக்கும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# பெருங்குடலின் மறைவில் தங்க பிஸ்கட்டுக்கள் கடத்தல்

## இலங்கை நபர் கைது

(கொழும்பு)

14 தங்க பிஸ்கட்டுக்களை பெருங்குடலின் கீழ்ப்பகுதியில் மறைத்து வைத்து கடத்திய குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் வருமான புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பைச் சேர்ந்த அல்தாப் சாஹுல் ஹமீட்(வயது 47) என குறித்த நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா ஏயார்வெய்ஸ் விமானம் காலை 8.50 மணியளவில் விமான நிலையத்தில் தரையிறங்கியபோது புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் குறித்த நபரைப் பிடித்தோம்.

குறித்த நபர் தனது பெருங்குடலின் கீழ்ப்பகுதியில் தங்க பிஸ்கட்டுக்களை மறைத்து வைத்திருந்த போதிலும் அவரை எக்ஸ் கதிர் பரிசோதனைக்குட்படுத்தியபோது அது நிரூபனமாகியதென தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட குறித்த நபரின் பெருங்குடலின் கீழ்ப்பகுதியிலிருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க பிஸ்கட்டுக்கள் அகற்றப்பட்டதாகவும் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (அ-2)

# தமக்குத் தேவையான விதங்களில் சட்டத்தில் திருத்தம் செய்யக்கூடாது

## வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

ஒவ்வொருவருக்கும் தேவையான விதத்தில் சட்டத்தில் திருத்தம் செய்யக்கூடாது என தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சட்டத்தை தமக்கு தேவையான வகையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பங்கள் முற்றுமுழுதாக தடைசெய்யப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக நாட்டில் சட்ட சமநிலை மிகவும் முக்கியமான பண்புகளில் ஒன்று. சட்டம் அனைவருக்கும் சமமானது என தெரிவிக்கப்பட்ட போதிலும் சில சந்தர்ப்பங்களில் சமமாக அமுல்படுத்தப்படுவதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டத்தை நிலைநாட்டும் நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகளே இதற்குக் காரணம் என தெரிவித்துள்ள அவர், சட்டம் அனைவருக்கும் சமமான நிலையில் அமுல்படுத்தப்படும் வரையில் நாட்டில் ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஆணைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்

## சர்வமத பேரவை வலியுறுத்தல்



கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் சர்வமத பேரவை நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அதன் பிரதிநிதிகளான மதத் தலைவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்ட னர்.பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதங்களின் தலை வர்கள் சர்வமத பேரவையின் சார்பாக கருத்துக்களை வெளியிட்டனர். ஆணை க்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாவிடின் அரசாங்கத்துக்கு எதிராக இளைஞர்களின் புரட்சியை தடுக்க முடியாது என அவர் எச்சரித் துள்ளார்.

ஆணைக்குழுவின்யோசனை ஊடாக இரத்து செய்யப்பட்டுள்ள 17 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் நாட்டில் இணைக்கப்பாட்டினை ஏற்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் தொடர்பிலான நிபுணர்குழு அறிக்கை இலங்கை குறித்து தாம் கேள்விப்பட்ட விடயங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பதவிகளுக்காக மனச்சாட்சியை ஒருபோதும் விற்கமாட்டேன்-தயாசிறி

(கொழும்பு)

பழிவாங்கும் நடவடிக்கைகள் மூலம் கட்சி எங்கே பயணிக்கிறது என தனக்கு புரியவில்லை என எதிர்க்கட்சி பிரதி பிரதம கொறடா பதவியிலிருந்து நீக்கப்பட்ட தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பதவிகளுக்காக மனச்சாட்சியை விற்கப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

தேர்தலுக்குப் பின் அதிகாரத்தைக் கைப்பற்றியோர் பழிவாங்கல்களில் ஈடுபடுகின்றனர். கட்சியினதும் நாட்டு மக்களினதும் நன்மைக்காக பணியாற்றியமைக்காக எனக்கு கிடைத்த பலன் இது. நான் ஒளிவு மறைவின்றி செயற்பட்டமைக்கான தெளிவான பழிவாங்கல் இது எனவும் அவர் கூறினார்.

நான் இந்த உலகத்திற்கு வரும் போது எந்தப் பதவியுடனும் வரவில்லை. உலகைவிட்டுச் செல்லும் போது எந்த பதவியுடனும் செல்லப் போவதில்லை. இக்குறுகிய கால வாழ்க்கையில் மக்களுக்கு சேவையாற்ற நான் உறுதி பூண்டுள்ளேன். பதவிகளை கருத்திற் கொள்ளாமல் நான் அதை செய்வேன்.

குருநாகல் மக்களிடமிருந்தும் நாட்டு மக்களிடமிருந்தும் என்னை அவர்கள் விலக்க முடியாது. என்னால் முடிந்தவரை நான் மக்களுக்கு சேவையாற்றுவேன். இப்பழிவாங்கலுக்கு அவர்கள் தெளிவான பதிலடி கொடுப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# முறிகண்டி பகுதி மக்கள் மீள்குடியமர இதுவரை அனுமதி கிடைக்கவில்லை

## மக்கள் விசனம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டம் முறிகண்டி பகுதி மக்கள் இதுவரை தம்மை மீளக்குடியேற்றாமைக்கு விசனம் தெரிவித்துள்ளனர்.

இங்கு நிரந்தரமாக வசித்துவந்த 48 குடும்பங்கள் தொடர்ந்தும் வவுனியா மெனிக்பாம் நலன்புரி முகாமில் தங்கியுள்ளனர்.

இதுதவிர இங்கு வசித்து வந்த மேலும் 69 குடும்பங்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசித்து வருவதாகவும் தம்மை மிகத் துரிதமாக மீளக்குடியேற்ற ஆவன செய்யுமாறும் மகஜர் ஒன்றின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை கோரியுள்ளனர்.

தாம் நீண்டகாலமாக வசித்து வந்த காணிகளை சுவீகரித்து தமக்கு மாற்றுக்காணி வழங்கவுள்ளதாக பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் வேறு இடங்களில் தமக்கு காணி தேவையில்லை எனவும் தமது சொந்த க் காணிகளிலே மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் முறிகண்டி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரவிப்பாஞ்சான், முகமாலை, வேம்படுகேணி, இத்தாவில், ஆனையிறவு ஆகிய பகுதிகளில் இதுவரை மீளக் குடியேற அனுமதிக்கப்படவில்லை.

இதுதவிர கிளிநொச்சி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயமான கந்தசுவாமி ஆலயத்தின் மடாலயம் மற்றும் பூங்கா, குருக்கள் இல்லம் ஆகியவற்றில் தொடர்ந்தும் இராணுவம் நிலைகொண்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சமய நிறுவனமான திருநெற்றிக்கழக காணி கட்டடங்களும் இராணுவத்தின் பாவனையிலே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# படகு மூலம் தமிழகம் சென்ற தமிழர்கள் எட்டுப்பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோத படகு மூலம் புதுக்கோட்டை கரையோரத்தை நேற்று முன்தினம் வந்தடைந்த இலங்கைத் தமிழர்கள் எட்டுப் பேரை இந்திய பொலிஸார் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடவுச் சீட்டுக்கள் மற்றும் செல்லுபடியான விசா இல்லாத காரணத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கச்சதீவுக்கு அருகில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் நால்வரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் நான்கு மீனவர்கள் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளதாக தமிழக மீன்பிடி உதவிப் பணிப்பாளர் ஏ.வீரன் கூறியுள்ளார். (அ-2)

# மொழியியல் சாதனையும் M.T.S. இராமச்சந்திரனும்

யாழ். மாவட்டத்தின் பன்மொழியியல் கல்லூரியான Europa Bildungs Forum & Eu Lanka Forum இந்து பௌத்த கலாசார பேரவையும் இணைந்து நடாத்தும் இலவச சிங்கள, ஆங்கில வகுப்புக்கள் ஜேர்மனிய சட்ட ஆலோசகரான திரு.M.T.S இராமச்சந்திரன் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் ஆரம்பிக்கப்பட்டது. இது ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை சுமார் ஒரு வருடத்தில் சிங்களம், ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழிகளை 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்றுத் தேறியுள்ளனர். அதில் சுமார் 250 பேர் வேலையற்ற பட்டதாரிகளும் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருப்பவர்களும்












க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதியவர்களும் அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோர்களும் அடங்குவார்கள். அரச,தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோருக்கு சனி மற்றும் ஞாயிறுகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மேலும் ஒவ்வொரு ஆறு மாதங்களும் 220 மணித்தியாலங்கள் கற்பித்துக் கொடுக்கப்படுகின்றன.

அதில் சிங்கள, ஆங்கில கற்கை நெறியாளர்கள் முற்றிலும் இலவசமாகவே





கற்று வருகின்றனர். இதில் கற்றுக் தேறியவர்கள் தங்களுக்கான சான்றிதழ்களை கொழும்பிலுள்ள சதஹாம் செவன என்ற புத்தசாசன ஆராய்ச்சி நிலையத்தில் Europa Bildungs Forum ஆல் ஏற்பாடு செய்யப்பட்டு பெற்றுக் கொண்டனர்.

சான்றிதழ் வைபவத்தில் முதல் தடவையாக இலங்கையின் உயர் கல்வி அமைச்சர் கௌரவ S.P திசாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு கற்றுத் தேறியோருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

அவருடன் இன்னும் பல அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இக்கற்கைநெறியை பின்பற்றியவர்களை அந்நாளில் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு அழைத்து பாராளுமன்ற உறுப்பினர் வணக்கத்துக்குரிய அத்துரலியரத்தினதேரர் அவர்கள் தேநீர் விருந்து அளித்து கௌரவித்தார்.அதன் பின்பு கௌரவ மாண்புமிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தனது உத்தியோகபூர்வ அலரிமாளிகைக்கு அழைத்து மர்ணவர்களை கௌரவித்தார். அத்துடன் திரு.M.T.S இராமச்சந்திரன் அவர்களின் சேவையினையும் பாராட்டினார்.

அதேபோல் சென்ற மார்கழி மாதம் 20 ஆம் திகதியும் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் இலங்கையின் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மோகன்லான் கிறேயோ அவர்களும் (கல்வி அமைச்சின் கண்காணிப்பும், இசுறு பாடசாலைகளுக்கான ஆலோசகரும்) மாணவர்களை கௌரவித்தார். அதன்பின்பு சென்ற வருடம் போல் மாணவர்களை புதிய பாராளுமன்ற கட்டடத்திற்கு அழைத்து தேநீர் விருந்துபசாரம் வழங்கினார். பின்னர் பாராளுமன்ற நடைமுறைகளை வீடியோ படக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டது.

அதிலும் பல தென்னிலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதுவரை 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயிற்றப்பட்ட சிங்கள, ஆங்கில ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டுள்ளது. அதில் 100 இற்கு அதிகமானோர் பட்டதாரி மாணவர்களும் அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோரும் ஆவர். இவர்களில் சில மாணவர்கள் யாழ். மாவட்டம் தவிர்ந்த வேறு மாவட்டங்களிலும் வேலை பெற்றுச் சென்றுள்ளனர்.

இங்கு கல்வி கற்ற சில மாணவர்கள் தங்களின் சுய முயற்சியால் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் இந்த வருடத்திற்கான முழுநேர இலவச கல்வியை கற்பதற்கு மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


இந்த கற்கை வகுப்புக்களில் இணைய விரும்புவோர் கீழ் காணும் முகவரியில் பதிவுகளை மேற்கொள்ளவும் சிங்கள, ஆங்கில மொழிகள் முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

Hindu Buddhist Cultural Association
Europa Buildung Forum
No:29 palam Road,
Kanthanmadam,
Jaffna.
T.P.021-720157

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

17-III

## திராட்சையில் பீடைகளும் முகாமைத்துவமும்



சென்றவாரம் திராட்சையில் துகள் பூஞ்சண நோய் பற்றி விரிவாகப் பார்த்திருந்தோம். இன்னொரு வகையான துகள் பூஞ்சண நோயென்றும் திராட்சைக் கொடிகளில் தொற்றுதலாகி மழைக்காலங்களிலும் குறிப்பாக ஈரப்பதன் அதிகரித்துக் காணப்படும் நாட்களிலும் விரைந்து பரவி பாரிய அளவில் சேதத்தை ஏற்படுத்திவிடும். இதனை கீழ்துகள் பூஞ்சண நோய் (Downey mildew) என அழைப்பார்கள். முன்னையது போலல்லாது திராட்சை இலைகளினதும் கீழ்ப்புறத்திலேயே இத்துகள் பூஞ்சணம் காணப்படுவதனால் இதற்கு இவ்வாறாக கீழ்துகள் பூஞ்சணம் என பெய்ரிட்டுள்ளனர்.

### கீழ்துகள் பூஞ்சணம்

இவ்வகையான பூஞ்சணம் திராட்சை பயிரிடப்படும் அனைத்து பிரதேசங்களிலும் திராட்சைக் கொடியில் தொற்றுதலாகி சேதத்தை ஏற்படுத்துவதாக அறியமுடிகின்றது. இது உலகளாவிய ரீதியில் காணப்படுவதாகவும் திராட்சை வகை பயிர்களிலும் தொற்றுதலாகும் என்பதும் கவனிக்கத் தக்கது. இத்துகள் பூஞ்சணத்தை பிளாஸ்மாபோரா விற்றி கோலா (Plasmopara viticola) என இனங்கண்டுள் ளனர். விவசாயம் கற்கும் மாணவர்கள் இக் கீழ்துகள் பூஞ்சணத்தை இனங்காணவும் அதுபற்றி மேலதிகமான தகவல்களை இணையத்தினூடாக பெற்றுக்கொள்ள இப் பெயர் உதவும் என்பதால் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வகைப் பூஞ்சணம் தாவரத்தின் இளம் பாகங்களில் விரைந்து பரவும் இயல்புடையது. தொற்றுதலுக்குள்ளான ஆரம்ப நாட்களில் சிறிய மெல்லிய பச்சை நிற புள்ளிகள் திட்டுக்களாக இலையின் மேற்பரப்பில் காணப்படும். அதே யிடத்தில் இலையின் கீழ்ப்புறத்தில் வெண்ணிற துகள் பூஞ்சணம் வளர்ந்திருப்பதனை அவதானிக்கலாம். இந்த நிலையிலேயே இருவகையான துகள் பூஞ்சணங்களை திராட்சை செய்கையாளர்கள் வேறுபிரித்தறிய முடியும். கீழ்துகள் பூஞ்சணமானது தனியாக இலையின் கீழப்பரப்பிலேயே வளரும்.

ஆனால் அதேநேரம் (மேல்)துகள் பூஞ்சணமானது (Powdery Mildew) இலையின் இரு பக்கத்திலும் வளரும் இயல்புடையது.

இந்த இயல்பினை வைத்துக் கொண்டு இரு வகை துகள் பூஞ்சணங்களையும் இனங்கண்டு கொள்ளலாம்.

ஆரம்பத்தில் மெதுவாக பரவ ஆரம்பிக்கும் இப்பூஞ்சணம் பின்னர் இலை முழுவதுமாக பரவி வெண்ணிற துகள் போன்று நிறைந்திருக்கும். நோய் தீவிரமடைந்திருக்கும் நிலையில் இலையின் கீழ்ப்பகுதி முழுவதுமாகப் பரவி அப்பகுதி மண்ணிற நிறமாக மாறும். பூஞ்சணத்தின் விருத்தி காரணமாக இலைகள் இறுதியாக கொடியிலிருந்து உதிர்வதனை அவதானிக்கலாம். கொடியினது நுனிப்பகுதியில் ஏற்படும் பூஞ்சண தொற்று பரவலடைய தொடங்கும் போது நீர்த்தன்மையான புள்ளிகள் காணப்படுவதுடன் தொடர்ந்து சிலநாட்களில் துகள் பூஞ்சண விருத்தியும் அதிகரித்து காணப்படும்.

இதனை இலகுவாக எமது கண்களினால் அவதானித்து நாம் உறுதி செய்து கொள்ளலாம். பூத்திருக்கும் காலப் பகுதியில் பூஞ்சணத் தொற்று ஏற்பட்டாலும் காய்பிடித்திருக்கும் காலங்களிலும் வெப்ப நிலை குறைவடைந்ததும் ஈரப்பதன் அதிகரித்தும் காணப்படுகையில் பூஞ்சணத்தின் பரவலும் விருத்தியும் வேகமானதாக இருக்கும்.

இதன் விளைவாக பூக்கள் உதிர்வதும் காய்கள் இளம் பிஞ்சு பருவத்தில் உதிர்வதனையும் அவதானிக்கலாம். பூஞ்சணம் வெளிக்கொள்ளாத நிலையில் பூக்களும் காய்களும் உதிரும் போது இதனைக் கண்ட விவசாயியின் மனமும் பாதிக்கப்பட்டுவிடும்.

அதிகளவில் முதலை கொடுத்து செய்யும் பயிர்ச் செய்கையாதலினால் இழக்கப்படும் பூக்களும் காய்களும் இழப்பாகவே கருத முடியும். வெண்ணெய் திரண்டு வரும் போது பானை உடைந்தது போல காய்ப்பிடிக்கும் போது உதிர்வடைவது கிடைக்கக்கூடிய ஆதாயத்தை இழக்கும் செயலாகவே இருக்கும்.


கீழ்துகள் பூஞ்சணத்தினால் ஏற்படுத்தப்படும் இப்பாதிப்பு திராட்சைக் கொடி காய்க்கும் நிலையிலிருந்தால் அதிகமாகவே இருக்கும். காய்கள் ஊதா நிறமாக மாறுவதுடன் அவற்றினது தோலும் கடின மானதாக மாறி சுருக்கமடையும். அவற்றினது வளர்ச்சி மட்டுப்படுத்தப்படுவதுடன் திராட்சை பழங்கள் வளர்ச்சியற்ற சிறந்த பார்வையற்றதாக காணப்படும். இதனால் திராட்சையின் விலையிலும் தரத்திலும் சரிவு காணலாம். விருப்பப்பட்டு வாங்குபவர்களினது எண்ணிக்கை குறைவடையும். ஒருமித்துப் பார்த்தால் கேள்வி குறைவடையும்.

இரண்டு வகையான துகள் பூஞ்சணங்களையும் அவை திராட்சையில் தோற்றுவிக்கும் அறிகுறிகளை கருத்தில் கொண்டு இனங்காண இப்போது உங்களால் முடியும் அல்லவா? அவ்வாறு இரண்டையும் இலகுவில் வேறுபிரித்தறிய முடியும்போது அவற்றை கட்டுப்படுத்தவும் முடியும். நோய் முற்றி தீவிரமடையும் வரை காத்திருக்காது ஆரம்பத்திலேயே நோய்த் தொற்றினை அவதானித்தால் பூஞ்சண நாசினியை விசுறுவதன் மூலம் மேலும் பரவலடைவதை மட்டுப்படுத்தலாம்.

கீழ் துகள் பூஞ்சணத்தை கட்டுப்படுத்த போடோ கலவை சிறந்ததாகும். இதனை விவசாயிகள் தாங்களாகவே தயாரித்து ஒரு கிழமை இடைவெளியில் மூன்றுமுறை விசிறலாம். மலிவானதும் ஆனால் கீழ்துகள் பூஞ்சணத்தை விரைந்து கட்டுப்படுத்தும் பூஞ்சண நாசினியாகவும் இதனைக் கருதலாம்.

செப்புசல்பேற்றையும் சுண்ணாம்பையும் சரிசமமாக கலந்து பெறப்படும் போடோ கலவை இன்றும் சிறப்பாக தொழிற்படுவதுடன் அதனை விவசாயிகள் தேவைக்கேற்ப உடனடியாக தயாரித்து பயன்படுத்துவதும் சிறப்புக் குரியது.

கீழ்துகள் பூஞ்சணத்தை கட்டுப்படுத்த சல்பர் விசிறக் கூடாது. செப்பு ஐதரொட்சையிட்டு அல்லது செப்பு சல்பேற்று பூஞ்சண நாசினிகளை விசிறி நோய் மேலும் பரவுவதை தடுக்கலாம். சல்பர் அல்லது கந்தகம் மற்றைய துகள் பூஞ்சணத்தை மட்டுமே கட்டுப்படுத்தவல்லது என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். (தொடரும்)




யாழ் எவ்.எம். வானொலியின் 102 MKZ அலைவரிசையில் **இது பசுமையின் நேரம்** எனும் நிகழ்ச்சி இவ்வருடத்தில் இருந்து ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 7.30 மணியிலிருந்து 8 மணிவரை ஒலிபரப்பாகின்றது. யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட ஆசிரியர்கள், மாணவர்களினது பங்களிப்புடன் ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சியில் விவசாயம் சார்ந்த பல தகவல்கள் வழங்கப்படுகின்றன.

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## பிரிட்டன் மயான பூமியை அகற்ற சட்டமா அதிபரிடம் ஆலோசனை

### கலை, கலாசார அமைச்சு

(கொழும்பு)

கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்கு மேற் புறமாகவுள்ள பிரித்தானிய மயான பூமியை அகற்றுவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலாசார மற்றும் கலை விவகார அமைச்சு தெரிவிக்கின்றது.

இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் வெளிநாட்டு மயான பூமியை அகற்றுவதற்கான கொள்கைகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான கோரிக்கை தமக்கு கிடைத்திருப்பதாக சட்டமா அதிபர் அலுவலகம் பதிலளித்துள்ளதாகவும் குறித்த மயானத்தை மஹிய்யாவ பகுதிக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிடுகிறது.

அதற்கு பிரித்தானிய மயானமொன்று இருப்பதுடன் குறித்த கல்லறைகளை அவ்விடத்திற்கு மாற்றத் திட்டமிட்டுள்ளதாகவும் கலாசார மற்றும் கலை விவகார அமைச்சர் டி.பி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

## இலங்கை தொடர்பில் செய்திவெளியிடும் 41 இணையங்களை பதிவு செய்ய முடிபு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான செய்தி வெளியிடும் 41 இணையதளங்களை பதிவு செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாக ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி.கனேகல தெரிவித்துள்ளார்.

இணையதளங்களை பதிவு செய்வது தொடர்பில் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் ஆலோசனைக்கு அமைய குறித்த 41இணையத்தளங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பதிவு செய்யப்படும் இணையத்தளங்களின் உரிமையாளர்கள் மற்றும் அதில் கடமையாற்றுவோர் பற்றிய சகல விபரங்களும் ஊடகங்களில் வெளியிடப்படவுள்ளது எனவும் ஊடக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 23 தொடக்கம் 28 வரையில் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பதிவு செய்வதற்கான கோரிக்கை விடுத்த 80 இணைய தளங்களில் 61 இணையதள நிர்வாகத்தினர் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்காக தோற்றிய சிலர் போலியான தகவல்களை வழங்கியுள்ளனர். இணைய தளங்களை பதிவு செய்வதற்கு காலக்கேடு விதிக்கவில்லை எனவும் எந்த நேரத்திலும் இணையத்தளங்களை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும் எனவும் ஊடக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பான செய்திகளை வெளியிடும் சகல இணைய தளங்களும் பதிவுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென அண்மையில் ஊடக அமைச்சு கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையில் தெரிவு செய்யப்பட்ட 41 இணைய தளங்களுக்கு மட்டும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை பதிவு நடவடிக்கைகளுக்கு எதிராக சில இணையதளங்களும் ஊடக நிறுவனங்களும் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கருணைக்கு பேதமில்லை



## ஆன்மீகம் 15

தற்போது, இந்த நோயால் பாதிக்கப்படும் 25 வருடங்கள் வாழ்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதை நம்மால் 60 வருடங்களுக்கு நீட்டிக்க முடிந்தால், அது இயல்பான வாழ்க்கையாகும். இந்த நிலை, மிக அதிக தூரத்திலிருப்பதாக நான் நினைக்கவில்லை. பல மருந்துவ முறைகளை இணைத்துக் கொடுப்பதன் மூலமும், யோகப்பயிற்சிகளை அளிப்பதன் மூலமும், இந்நோயால் பாதிக்கப்பட்ட குழந்தையை, அதன் முழுமையான ஆயுட் காலத்திற்கு வாழச் செய்யமுடியும். ஆனாலும் நோய்க்கான மருந்தை அளிக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது.

அநேக மக்கள், எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டிருந்தாலும், பாதிக்கப்படவில்லை என்றாலும், அநேக குறைபாடுகளுடன்தான் வாழ்கிறார்கள். எனவே, கையாள முடியாத ஒன்று வாழ்க்கையில் நிகழ்ந்துவிட்டதே என்கிற நினைவை முதலில் மனதிலிருந்து ஒழிக்க வேண்டும். பெற்றோர்கள், இந்த சூழ்நிலையை அறிவோடும், ஞானத்தோடும் கையாண்டால், இச்சூழ்நிலையைக் கண்டிப்பாக சரிபடுத்த முடியும். எனவே, இந்த 12 ஆயிரம் குழந்தைகளையும் ஓரிடத்தில் நம்மால் ஒன்று சேர்க்க முடியுமானால், அவர்களைக் கையாளுவது எளிதாக இருக்கும். அப்படியில்லையென்றால், தொண்டு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இந்தக் குழந்தைகளை 300 அல்லது 500பேர் கொண்ட குழுக்களாக அமைத்து, அவர்களை ஓரிடத்தில், ஒரு வார காலத்திற்கு தங்க ஏற்பாடு செய்தால், பயிற்சிகளை எளிதாக கற்றுக் கொடுக்க முடியும். சில யோக ஆசிரியர்களை, இந்தக் குழந்தைகளுக்காக நாம் அர்பணிக்க முடியும். நாம்,அதைச் செய்வதற்க்குத்தயாராக இருக்கிறோம்.



பெற்றவர்கள் எய்ட்ஸ் ஆல் இறந்ததால் அநாதரவாக்கப்பட்ட பிள்ளைகளில் சிலர்

கேள்வி:நானும் என்கணவரும், என் மகனும், எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் ஊரிலுள்ள எச்.ஐ.வி/எய்ட்ஸ்-ஆல் பாதிக்கபட்ட மக்களுக்கு, எந்த உதவியாக இருந்தாலும், அரசு உதவியாக இருந்தாலும் நான் வாங்கிக் கொடுப்பேன். எச்.ஐ.வி வந்தவுடன், மக்கள் இறந்து விடுவார்களென்று மற்றவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால், நான் கவுன்சிலராக ஜெயித்தது எனக்கே பெருமையாக இருக்கிறது. எச்.ஐ.வி மக்களாகிய நாங்கள் வாழ்ந்து காட்டுவோம். ஐயா, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

சத்குரு: இப்போது,இந்தப்பிரச்சினைக்கு மிக முக்கியமான ஒரு தீர்வு என்ன வென்றால், ஈஸ்வரி வேண்டும். ஈஸ்வரி என்றால் தைரியமும் தெம்பும் என்று பொருள். வாழ்க்கையில் இந்தத் தைரியமும் தெம்பும்தான் ஒவ்வொருவருக்கும் வேண்டும். இவையில்லாமல் எதுவும் செய்ய முடியாது. அனைவருக்குமே, ஏதோவொரு குறை இருக்கிறது. ஒருவருக்கு நோய் வருகிறது, இன்னொருவருக்கு மனதில் ஏதோ குறை இருக்கிறது.மற்றொருவருக்கு வாழ்க்கையில் ஏதோ ஒரு குறை வருகிறது. பலவிதத்தில் குறைகள் நமக்கு வருகின்றன. ஆனால், அவைகளையெல்லாம் தாண்டி, நம் திறமையை முழுமையாகப் பயன்படுத்தி வாழ்கின்ற ஒரு தெம்பையும், தன்னம்பிக்கையும் மனிதன் உருவாக்க வேண்டும். எல்லாவற்றிற்கும், முக்கியமானது ஈஸ்வரிதான். ஈஸ்வரி, இப்போது நம் எல்லாருக்குள்ளும் பிறக்க வேண்டும். நோய் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்தத் தன்மையை நமக்குள் கொண்டு வந்தால் தான், நம் வாழ்க்கையில் எந்தப் பாதிப்பு வந்தாலும், அதைத் தாண்டி வாழ வாய்ப்பிருக்கிறது. இந்தத் தன்மை ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் வரவேண்டும்.

ஆனால், யாரோ ஒருவர் உங்களை கண்காணிக்கிறார் என்று நீங்கள் நினைத்தால், ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டியுள்ளது. எப்போது நீங்கள் சமுகத்தில் வாழ்கிறீர்களோ, அப்போது யாரும், ஏதும் தன்னை சொல்லக்கூடாது அல்லது விமர்சிக்கக் கூடாது என்கிற ஆசையை விட்டுவிடவேண்டும். நாம் எதைச் செய்தாலும், யாரோ ஒருவர், ஏதோ ஒன்றைச் சொல்லிகொண்டேதான் இருப்பார்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# இரண்டாம் உலக யுத்தம்

02



அடால்ப் ஹிட்லர்

1935 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நடைபெற்ற பாசிஸக் கட்சியின் ஏழாவது காங்கிரஸ், ஜேர்மனியை ஆக்கிரமிப்பு அரசாக மாற்றுவதற்கான ஜேர்மனிய பாசிஸ்டுகளின் வெறிபிடித்த நடவடிக்கை முழுவதற்கும் சிகரமாக அமைந்தது. இந்தக் காங்கிரஸ் "சுதந்திரக்கட்சிக் காங்கிரஸ்" என்றும் 1935 ஆம் ஆண்டு "சுதந்திர ஆண்டு" என்றும் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்போது இறுதியாக ஜேர்மனியர்களுக்கு இராணுவ அரசுரிமையும் ஆயுதம் தரிக்கும் சுதந்திரமும் கிடைத்துள்ளன என்று நாஜிக் கட்சியினர் அறிவித்தனர். இந்தக் காங்கிரஸ் பாசிஸ அரசின் வளர்ந்துவரும் இராணுவ பலத்தின் வெளிப்படையான பிரகடனமாகவும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்காக ஜேர்மனியர்களை சித்தாந்த ரீதியாகவும் மனநிலை ரீதியாகவும் தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட் மிகப்பெரும் பிரச்சார நடவடிக்கையாகவும் அமைந்தது. 1936 ஆம் ஆண்டு அப்போது நிலவிய ஒப்பந்தங்களை மீறி ஹிட்லர் ஆட்சி ரைன் பிரதேசத்திற்குள் இராணுவத்தை அனுப்பியது, மீண்டும் பிரஞ்சு எல்லையை நோக்கிச் சென்றது. இவ்வாறாக ஜேர்மனியில் பாசிசம் ஆட்சிக்கு வந்ததானது, எல்லாவற்றிற்கும் மேலாக சோவியத் யூனியனுக்கு எதிரான சர்வதேச எகாதிபத்தியத்தின் முக்கிய தாக்குதல் சக்தியாக ஜேர்மனியை மாற்றியது. முழு இராணுவமயமாக்கல் மற்றும் உலக ஆதிக்கத்தைக் கைப்பற்றுதல் எனும் பாசிச திட்டம் சோவியத் யூனியனை கைப்பற்றுவதோடு நின்றுவிடாமல் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய நாடுகளையும் அச்சுறுத்தினாலும் இந்நாடுகளின் ஆளும்

## யுத்தத்தின் முன்னணைப் பொழுதில்

வட்டங்கள், சோவியத் நாட்டின் பாலான வர்த்தக வெறுப்புணர்வால் உந்தப்பட்டு "தலையிடாமை" மற்றும் "நடுநிலை" எனும் சாக்குப்போக்குகளைக்காட்டி சாரம்சத்தில் ஆக்கிரமிப்பை நோக்கமாக் கொண்ட பாசிச கூட்டின் நாடுகளை ஊக்குவிக்கும் கொள்கையை பின்பற்றின. மேலைய நாடுகளின் முதலாளிகளிடமிருந்து, குறிப்பாக அமெரிக்க ஏகபோகங்களிடமிருந்து வந்த முதலீடுகளும் கடன்களும் ஜேர்மனியின் இராணுவப் பொருளாதாரம் புனரெழுச்சி பெற உதவின. இந்தப் பயனாய் 30ஆம் ஆண்டுகளின் இறுதியில் பாசிச ஜேர்மனியில் இராணுவத் தொழிற்துறை, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஒட்டு மொத்த தரத்தைவிட அதிக உயர்வான மட்டத்தை அடைந்தது. இத்தோடு, இத்தாலியும் ஜப்பானும் தமது பொருளா தாரத்தைக் கணிசமாக இராணுவ மயமாக்கின.

மேலும் மேலைய நாடுகள் பாசிச ஜேர்மனிக்கு போர்த்தந்திர முக்கியத்தவமுடைய மூலப் பொருட்களை வழங்கி உதவின. உதாரணமாக 1936-ஆம் ஆண்டு அக்டோபரில் பிரபல ஜேர்மன் தொழிலதிபர் ஷாஹ்ட் மூன்றாவது பேரரசின் பொருளாதார அமைச்சராயிருந்த போது ஆண்டு தோறும் மூன்றரை பில்லியன் மார்க்குகளுக்கும் கூடுதலான மதிப்புள்ள இரும்புத் தாதுவை வாங்குவது சம்பந்தமாக பிரெஞ்சு அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டார். ஜேர்மனிக்கு பாக்சைட்டின் வரவும் 6 மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது. விமானக் கட்டுமானத்திற்கு மிக முக்கியமான அலுமினிய உற்பத்தியில் உலகிலேயே முதலிடத்திற்கு வர இது ஜேர்மனியக் கம்பனிகளுக்கு உதவியது.

**வி.அ.மத்சுலேன்கோ**
**மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்**



1936-ஆம் ஆண்டு செப்டெம்பரில் நாஜித் கட்சியின் நியூரென்பர்க் காங்கிரஸ் ஜேர்மனியின் பொருளாதாரத்தை யுத்தத்திற்கு தயாராகும் வழிகளில் மேற்கொண்டு மாற்றியமைக்கும் நான்காண்டுத் திட்டத்தை அங்கீகரித்தது. நான்காண்டுகள் கழித்து ஜேர்மனிய இராணுவம் செயற்படத்தயாராக இருக்க வேண்டுமென்றும் இதே கால கட்டத்தில் ஜேர்மனியின் பொருளாதாரம் யுத்தத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் 1936-ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் வெளியான ஹிட்லரின் இரகசியச் சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் ஏகபோகங்களின் உதவியால் புத்துயிர்ப்புப் பெற்றிருந்த பாசிச ஜேர்மனியின் இராணுவத் தொழிற்துறை துரிதமாக வளர ஆரம்பித்தது.

(தொடரும்)

# காரைநகர் திண்ண

# ஈழத்துச் சிதம்பர திருவாதிரை தே

## பிரதம சிவாச்சாரியாரின் ஆசியுரை

இன்று சுந்தரேஸ்வரப் பெருமான் சௌந்தராம்பிகை அம்மனுடன் திருத்தேரில் ஆரோகணிக்கும் பஞ்சரதபவனி நாளாகும். இது ஒரு பொன் நாள். அடியார்களின் துயர் தீர்க்கப் புறப்படும் நாள்.

நாட்டில் இனி அமைதியும் இன ஒற்றுமையும் ஓங்க சுந்தரேஸ்வரப் பெருமானையும் சௌந்தராம்பிகையையும் ஐயனாரையும் வேண்டுவதோடு எல்லோரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ திருவருள்புரிய வேண்டும் என்று தில்லைக் கூத்தனின் திருப்பாதத்தைப் பணிந்து வேண்டுகின்றேன்.

இன்று பஞ்சரத பவனி காணும் அனைத்து அடியார்களும் எம்பிரானின் இஷ்ட சித்திகளைப் பெற்று, சகல செல்வங்களும் பெற ஆசிகூறி தில்லைக் கூத்தனின் பாதங்களைப் பணிந்து நிற்போமாக.

**சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்,**
**ஈழத்துச் சிதம்பரம்.**


## மூதறிஞர் வாழ்த்துரை

"செப்பியவன் தமிழ் மாலையாலே திருவாதிரை திகழ் செல்வம்" என்று நாவுக்கரசர் கூறிய திறத்தை கூறுகிறார் சேக்கிழார். இங்கு திருவாதிரைவிழா "செல்வம்" என்று கூறப்படுகின்றது. இச் செல்வம் மற்றைய எல்லாச் செல்வங்களிலும் தலையாயது. கண்களால் அனுபவிக்கப்படுவது. இவ்விதமான பெரும் சிறப்பினையுடைய திருவாதிரை விழா சைவ உலகிற்கு உயர் நிலையான சிதம்பரத்தில் நடைபெறுவது போல காரைநகர் ஈழத்து சிதம்பரத்திலும் விதிப்படி சிறப்பாக நடைபெறுவது எம் மக்கள் செய்த புண்ணியமாகும்.

திருவாதிரை நாளின் 9ஆம் நாளான இன்று பஞ்சரத பவனி நடைபெறுகின்றது. நடராஜப்பெருமான் தேரில் எழுந்தருள்வதற்கு திருநடனம் ஆடிக் கொண்டு அம்பாளுடனும் பரிவார மூர்த்திகளுடனும் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இன்று இரவு 3 மணி தொடக்கம் வசந்த மண்டபத்தில் நடராஜ பெருமானுக்கு செய்யப்படும் அபிஷேகத்தை தரிசிப்பதும் அதன் பின்னர் சூரிய உதயத்திற்கிடையில் நடைபெறும் தீபாராதனையை தரிசிப்பதும் பெரும் சிவபுண்ணியப் பேறாகும்.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆதிரை விழா பற்றி வலம்புரி நாளிதழில் மலர் ஒன்று வெளிவருவது பாராட்டுக்குரியது!

**சிவத்திரு கலாநிதி**
**வைத்தீஸ்வரக்குருக்கள்**
**ஈழத்துச் சிதம்பரம்.**



மலரமைப்பு
காரைநகர் செய்தியாளர்


**சுப்ப சூஸ்**
இல 154, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**சரவணா றெக்ஸ்**
இல 770, 772, தட்டாதெருச்சந்தி
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவன் மோட்டோர்ஸ்**
75, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

துவிச்சக்கரவண்டிகள், அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
ரீ.வி, டெக்வகைகள், றேடியோ வகைகள் ,அன்ரனா வகைக
போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
**இ.ச.பே. நாகரட்ண**
இல.50,52,54, கஸ்தூரியார் வி.
யாழ்ப்பாணம்.

**சீமாட்டி**
**புடைவைக் கடல்**
கிளைகள்: மங்கை சில்க்ஸ்
(இல.15 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.)
(இல.122 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்)
தொ.பே:- 222 2196, 222 2102

உலகில் எந்தப் பாகத்தில் இருந்தும்
சிலமணி நேரங்களில் மிக விரைவாக
பணத்தை பெற்றுக்கொள்ள
**திருமுருகன் கொம் நெற்**
**WESTERN UNION**
259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7835 (ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி ,திருநெல்வேலி.
தொ.பே 021 222 7310
(நல்லூர் ப.நோ. கூ.சங்கம் முன்பாக)

**அற்புதா**
**ரேடிங் கம்பனி**
இல.198, ஆஸ்பத்திரி வீத
யாழ்ப்பாணம்.

# புரம் சிவன் கோவில்
# தேர் சிறப்புமலர்- 07.01.2012



## ஆலய ஆதீன கர்த்தாக்களின் ஆசியுரை

இன்று ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். தென்னாட்டில் உள்ள சிதம் பரத்திற்குச் சென்று திருவாதிரை விழாவினை தரிசிக்கமுடியாது. அகக் கண்களால் அக் காட்சியை காணும் அடியார்கள் ஈழத்தில் காரைநகரில் உள்ள சிவன்கோவிலில் தில்லைநடராஜனின் திருநடனத்தினை புறக்கண்களால் கண்டுகளிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

இவ்வாய்ப்பினைப் பெறும் பக்தர்கள் அனைவரும் பிறப்பில் பிணிநீங்கி எல்லையில்லாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்ய எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பர சவுந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் பூரணை, பொற்கலை சமேத ஆண்டிக்கேணி ஐயனாரினதும் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

**ஆ.அம்பலவி முருகன், மு.சுந்தரலிங்கம்,**
**ஆதீனகர்த்தாக்கள்.**

## ஈழத்துச் சிதம்பர திருவெம்பாவை மகத்துவம்

சைவர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்நாளிலே ஒரு தடவையாவது சிதம்பர நடராஜ தரிசனத்தை காணவேண்டியது கடனாகும். சென்ற நூற்றாண்டில் நடுக்கூறு வரை ஆண்டுதோறும் திருவாதிரைத் திருவிழாவை தரிசிக்கச் சென்றவர்கள் பலராவர். இவ்வாறு சிதம்பர தரிசன வழக்கம் கொண்டிருக்கும் குடும்பங்கள் தீவுப் பகுதிகளில் அதிகமாக இன்றுமுள.

காரைநகரில்- திண்ணபுரச் சிவன் கோயில் என்று ஒன்று உண்டு என்றால் ஒருவரும் அறியார். ஆனால் ஈழத்துச் சிதம்பரம் தெரியுமா என்று கேட்டால் எல்லோருமே தெரியும் என்பார்.காரணம் இலங்கையில் மார்கழித் திருவெம்பாவை விரதம் எல்லா இடங்களிலும் யாவராலும் மிகப் பக்தி பாங்காக அனுஷ்டிக்கப்படுவதுண்டு. திருவெம்பாவை 9 ஆம் நாளன்று சிதம்பரத்தை போன்று இலங்கையிலும் பஞ்சரதபவனி நடைபெறும் தலம் காரைநகர் சிவன் கோவில் ஆகும். மறுநாள் அதி காலையிலேயே ஆருத்திராபிஷேகமும் அங்கே போல இங்கும் மிக நேர்த்தியாகவும் பக்தி பரிமளிப்புடனும் நடைபெறுவதே காரணம் ஆகும். ஈழத்துச் சிதம்பரத்தே நிகழும் பஞ்சரத பவனி பார்க்கப் பார்க்க தெவிட்டாத புத்துணர்வை அள்ளி வழங்குவதாகும்.வேதாகம வல்லுநர்களாய பிராமணர்கள் ஸ்ரீருத்திர பராயணம் செய்யவும் திருமுறை வல்லார்கள் திருவாசகப் பதிகங்களை கான மழையாய் பொழியவும் நாதஸ்வர, தவில் வித்துவான்கள் நாதமழை பொழியவும் சங்குகள் முழங்கவும் சேமக்கலங்கள் நவிலவும் சம்பங்கி, செவ்வந்தி, முல்லையாதி மலர்களை கூடை கூடையாகக் கொண்டு பக்த ஜனங்கள் தூவவும் அனவரத தாண்டவ மூர்த்தியாகி நடராஜப் பெருமான் கொடுகொட்டி நடனம் ஆடியபடி தேருக்கு எழுந்தருளுவதும் மீளவும் (தேரோடியபின்) யதாஸ்தானம் திரும்புவதும் ஈழத்தில் வேறு எங்குமே காண முடியாத திருப்பெரும் காட்சிகளாம்.

ஈழத்துச் சிதம்பரம் **பக்தர் கோயில்** எனலுமாம் மணிவாசகர் மடாலயமும் அங்கு ஓயாதொழியாது நிகழும் திருவாசக முற்றோதல்களும் திருவாதவூர் அடிகள் புராணப் படனங்களும் அடியார் பூசைகளும் அன்னதான அறப் பணிகளும் ஒருபுறம் விளங்கும். என்பு எழுந்து இலங்கும் உடம்பினராக- நண்பகல் பலவுடன் கழிந்த உண்டியராக- உச்சிக் கூப்பிய கையினராக விழுந்தும் எழுந்தும் வழிபடுவோர் இன்னொரு புறம்.

**பாடவேண்டும் உன்னையே** என்று கூத்தப் பெருமானையன்றி கருவாய்ப்பட்டு பிறந்திறந்து கழியும் ஆன்மவர்க்கத்துக்குச் சிறு தெய்வங்களை ஒருபோதும் நாக்கொண்டு பாடாத கற்பினர்களின் திருக்கோட்டம் ஒருபுறம். அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை ஆடலரசின் மீது வைத்து அங்கப் பிரதட்சணம் செய்யும் நூற்றுக்கணக்கான மெய்யடியவர்கள் ஒருபுறம், ஆலய தெற்கு வீதியில் மார்கழி திருவிழாக் காலத்தில் முழங்கால் அளவு மழை வெள்ளம் நில்லாமல் போவதில்லை. ஆயினும் அங்கப் பிரதட்சணமும் அடியளிப்பும் நிகழ்த்தாமல் விடப்பட்டதும் இல்லை. இந்த அங்கப்பிரதட்சணகாரரின் இன்னும் ஒரு சிறப்பு மழை சோவென்று ஓயாமல் பெய்தாலும் தேரிலிருந்து சுவாமி இறங்கும் வரை யாருமே எழும்பாமல் தவம் கிடத்தலாகும். இத்தகைய பக்தி வைராக்கியத்தை, விசித்திரத்தைக் கண்டாலே அநேக ஜென்ம பாவம் கழியும் .

தேர்த்திருவிழாச் சிறப்பு இவ்வாறு இருக்க மறுநாள் அதிகாலை 3 மணி முதல் நிகழும் ஆருத்திராபிஷேகமும் கண்டனுபவிக்க வேண்டியது. தாய் ஒருத்தி தனது குழந்தைக்கு மூச்சுத் திணறுமோ என்ற பயத்தினோடு மிக்க பக்குவ பாங்காக நீராட்டுவது போன்று குடங்குடமாக குவிந்து பெருகியுள்ள அபிஷேகப் பொருட்களைக் கண்டு அவசரப் படாமல் மிக்க நிதானமாகவே சிவாச்சாரியார்கள் அபிஷேகிக்கும் அழகே தனியழகாகும்.

தொடர்ந்து இராஜோபசாரம் போன்று நிகழ்த்தப் பெறும் 16 வித உபசாரப் பூசையை காணவென்றால் ஆயிரம் கண்களும் போதா. இந்த வேளையில் மணிவாசக சுவாமிகள் அருளிய **கண்டபத்து** என்னும் பதிகத்தை சுத்தமோகனராகத்தில் ஓதுவதைக் கேட்டால் பேரானந்தம் அளிக்கும். மேலும் ஈழத்துச் சிதம்பரத்தை ஓதுவார் மரபின் விஷேடமும் உன்னதமானது. திருவெம்பாவை காலங்களில் ஆலய ஓதுவார் மூர்த்திகள் அவர்கள் ஓதும் திருவெம்பாவை பாடல்கள் இராகக் கலப்பின்றி மரபொழுங்கு பிசகாமல் சுத்த மோகனராகத்தில் பாடப்படுவது தனிச் சிறப்பாகின்றது. சுருங்கக்கூறின் ஈழத்துச் சிதம்பர தலத்தில் நிகழும் திருவெம்பாவை திருவிழா நிகழ்வுகள் ஒவ்வொன்றுமே சிதம்பரத் திருக்கோயில் உணர்வுகளை ஒவ்வொரு பக்தர்களுக்கும் பிசகாது அளிக்கின்றன. ஆதலால் ஆண்டு தோறும் ஈழத்துச் சிதம்பரத்தில் நிகழும் திருவெம்பாவை தேரோட்டத்தையும் திருவாதிரை தரிசனத்தையுமாவது தவறாது தரிசித்தல் கடனாகும்.

**சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்**
**சமயப்பிரசாரகர்,திருவாவடுதுறை ஆதீனம்**

யோகங்கள்,
ா வகைகள்
யாகவும்
ணம்
யார் வீதி.

யாழ்.ஏக விநியோகஸ்தர்கள்
கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
இல.147,149, ஸ்ரான்லிறோட்,
யாழ்ப்பாணம் .
தொ.பே.222 2833, 222 7144


பனி
திரி வீதி,

அனைத்துவகையான ஆடைகளையும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்திட நாடவேண்டிய ஒரே இடம்
மகாராணி பட்டுச்சோலை
இல. 50 , பெரியகடை ,
யாழ்ப்பாணம் .

இதோ 171 ஸ்ரான்லி வீதியில்
உங்களது நன்மதிப்பு பெற்ற பிரீடம் எல்.எம்.ஏல். ஸ்கூட்டர், மோட்டர்சைக்கிள், விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள புதிய நிறுவனம்
எஸ்.பீ.என். மோட்டர்ஸ்
S.P.N.MOTORS
171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் .

சகல விதமான பலசரக்குப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
றூபா பன்முக வர்த்தகம்
இல.104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம் .
தொ.பே. 021 222 2479

# தமிழ்த் தேசியப் போராட்டத்தில் திருப்புமுனை சக்தியாகும் தமிழ் சிவில் சமூகம்



அறுபத்து மூன்றாவது சர்வ தேச மனித உரிமைகள் தினத்திற்கும், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவினால் தாயாரிக்கப்பட்ட அறிக்கை வெளிவருவதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியான டிசம்பர் 13 ஆம் திகதி (2011) தமிழ் தேசியத்தினது வாழ்விலும் எதிர்காலத்திலும் அக்கறையுள்ள தமிழ் சிவில் சமூகத்தினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அனுப்பப்பட்ட பகிரங்க விண்ணப்பமானது, தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான செயற்பாடாகும்.

மேற்குறித்த செயற்பாடானது 1976 ஆம் ஆண்டு வட்டுக் கோட்டைத் தீர்மானத்திற்கும், அதன் தொடர்பான 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் வழங்கப்பட்ட ஆணைக்குக்கும் பின்னர், வடகிழக்கைகச் சேர்ந்த சிவில் சமூகத்தினரால் துணிகரமாக முன்னெடுக்கப்பட்ட வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் நகர்வாகவே ஆக்கபூர்வமாக விமர்சகர்களாலும், அரசியல் அவதானிகளாலும் நோக்கப்படுகிறது.

**யார் இந்த சிவில் சமூகம்?** வடகிழக்கைத் தமது தாயகமாக் கொண்டு வாழ்ந்து வரும் இவர்கள். தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த மரியாதைக்கும், மதிப்புக்குமுரிய மதத்தலைவர்கள். மருத்துவ கலாநிதிகள், சட்டத்தரணிகள், பல்வேறுபட்ட துறைசார் கல்விமான்கள், புத்திஜீவிகள், பல்கலைக் கழக மாணவர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள் என ஒரு தேசியத்தின் பலமாக, அதன் நம்பிக்கையாக திகழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

இலங்கை அரசாங்கத்தின் கொடிய அடக்கு முறைக் கரம் நீண்டுள்ள வடகிழக்கு திறந்த வெளிச் சிறைச் சாலைக்குள் வாழ்ந்து கொண்டு, தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். எனத் தெரிந்து கொண்டும் மக்களோடு மக்களாக மக்களுக்காக அர்ப்பணிப்போடு வாழ்ந்து கொண்டிருக்கும் பலரை தன்னகத்தே கொண்டதே தமிழ்த் தேசியத்தினது வாழ்விலும் எதிர் காலத்திலும் அக்கறையுள்ள இந்த சிவில் சமூகம் தமிழ்த் தேசத்தின் இருப்பை உறுதிசெய்ய முற்படும் மூத்தோர் உட்பட, தமிழ் தேசத்தின் எதிர் காலத்தை ஆக்க பூர்வமானதாக வடிவமைப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் குறிப்பிடத்தக்க இளையோரைக் கொண்டுளது இந்தக் கட்டமைப்பு. அந்த வகையில், காலத்தின் தேவை கருதி சிவில் சமூகத்தின் சில பண்புகள் தொட்ர்பாக மிகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

**சிவில் சமூகத்தின் பங்களிப்பு என்ன?**

சிவில் சமூகம் என்பது, ஜன நாயகப் பண்புகளையும் பன்மைத் துவத்தையும் கொண்ட முற்போக்கு சிந்தனை உள்ள தேசங்களின் தூணாக விளங்கி வருகிறது. ஒரு தேசத்தின் இருப்பையும், எதிர்காலத்தையும் நிர்ணயம் செய்வதில் இவர்களுடைய பங்களிப்பு அளப்பரியது. இதன் காரணமாகவே, மேற்குலக நாடுகள் சிவில் சமூக அமைப்புகளுக்கு முக்கிய இடத்தை வழங்கி வருகின்றன. அத்துடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சிவில் சமூக கட்டமைப்புக்களை பிரதான வகிபாகமாக கருதுகின்றன. அத்துடன், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள், சிவில் சமூக அமைப்புகளின் ஆளுமையை வலுப்படுத்தவதில் கவனம் செலுத்துகின்றன.

இவையனைத்தும், ஜனநாயகம், பன்மைத்துவம், முற்போக்குத்தனம் போன்ற பண்புகளையுடைய அரசாங்கங்களால், அமைப்புகளால், கட்டமைப்புகளால் ஏற்றுக் கொள்ளப்படுவது வழமை. ஆயினும் சுதந்திரமானதும், இதய சுத்தியும் உடைய சிவில் சமூகங்களின் வகிபாகம். மக்களின் நலன் எனக்கூறிக்கொண்டு செயலில் மக்களின் விருப்புக்கு எதிராக செயற்படும் அரசாங்கங்களால், அரசியல்வாதிகளால், அமைப்புக்களால், வன்மையாக எதிர்க்கப் படுகிறது. அந்த துர்பாக்கியச் சூழல், அபிவிருத்தி அடைந்து வரும் பல்வேறு நாடுகளிலும் காணப் படுகிறது.

ஒரு தேசத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசு ஸ்ரேட் அரசாங்கம் கவுன்மென்ற் மற்றும் அரசியல்வாதிகளின் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு ஆதரவாக இருக்கும் சிவில் சமூகங்கள், மேற்குறித்த மையங்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில், அல்லது மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக செயல்படும் சந்தர்ப்பங்களில் குறித்த கட்டமைப்புகளை பொறுப்பக்கூறும் தன்மைக்கு உள்ளாக்குகிறார்கள். இதனூடாக குறித்த மையங்கள் அரசியல் நேர்மையுடனும் இதய சுத்தியுடனும் சரியான பாதையில் பயணிப்பதற்க்கு வழியமைக்கப்படுகிறது.

**தமிழ்தேசிய சிவில் சமூகத்தின் தோற்றமும், போக்கும்.**

இந்திய இராணுவம் தமிழர் தாயகத்தில் **சிற்றிசன்கொமிற்றி** என்ற ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இது சிவில் அமைப்பின் பண்புகளை கொண்டிருந்தாலும், அன்றைய சூழல் தமிழ் தேசியத்துக்கு சார்பான நகர்வை மேற்கொள்ள முடியாமல் செய்தது. இதில் ஏற்பட்ட பின்னடைவுகள், சவால்களை 2008 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இடம் பெற்ற தனிப்பட்ட கலந்துரையாடலில், அதில் பிரதான பாத்திரம் வகித்த காலஞ்சென்ற பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் கவலையுடன் பகிர்ந்து கொண்டார். யாழ்குடாநாடு இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் கைதுகள், காணாமற்போதல்கள் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. இந்தக்கட்டத்தில், சமாதானத்துக்கும் நீதிக்குமான செயற்குழு என்ற பெயரில் தோற்றம் பெற்ற சிவில் சமூகம் கைதுகள் மற்றும் காணாமல் போதல்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அன்றைய காலகட்டத்தில், தமிழ் அரசியல்வாதி களைவிட சிவில் சமூகமே மக்கள் தேவையை கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

யாழ்மண்ணில் இடம்பெற்ற முதலாவது எழுச்சிபூர்வமான பொங்குதமிழ் நிகழ்வை நடத்துவதிலும் சிவில் சமுகமே பின்னனியில் நின்று செயற்பட்டது. சிவில் சமூகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்ததாலேயே விடுதலைப் புலிகளால், பிரதேச வாரியாக தேசிய எழுச்சிப் பேரவை உருவாக் கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து ஏ9 வீதி திறக்கபட்ட ஆரம்பத்தில், அந்தப் பாதையால் பிரயாணம் செய்த பிரயாணிகளுக்கும், விடுதலைப்புலிகளின் கண் காணிப்புப் பிரிவினருக்கும் இடையில் வரி அறவீடு தொடர்பான பிணக்குகள் உருவாக்கம் பெற்றது. இந்த நெருக்கடி நிலையை தணிக்கும் செயற்பாட்டிலும் சிவில் அமைப்புகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செலுத்தியிருந்தன.


ஆனால், முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர், தமிழர்களுடைய வாழ்வென்பது நாதியற்றவர்கள் என்ற நிலையை நோக்கி நகர முற்பட்ட வேளையிலேயே, நம்பிக்கை தரும் ஒரு செயற்பாடாக வடகிழக்கைச் சேர்ந்த பல்வேறுபுட்ட தரப்பினரும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கு பகிரங்க விண்ணப்பத்தை அனுப்பி சிவில் சமூகத்திற்கு உயிரூட்டி



னார்கள் இவர்களுடைய வகிபாகத்தின் கனதி கருதியே சர்வதேச இராஜதந்திரிகள் தொடக்கம் பல்வேறுபட்ட தரப்புக்களும் இவர்களை காலத்திற்குக் காலம் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர்.

(தொடரும்)

# மேர்வினுக்கு எதிராக போர்க்கொடி



(கொழும்பு)

களனி பிரதேச சபை உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக போர்க்கொடி ஏந்தியுள்ளனர்.

களனி பிரதேச சபைத் தலைவர் பிரசன்னரணவீர, உபதலைவர் சுமிலதுமிந்த மற்றும் லங்கா விஜிதகுமார, ஹசித கெலும் மடவள, மில்ரோய் பெரேரா உள்ளிட்ட 12 பேரே இவ்வாறு அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக போர்க்கொடி ஏந்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் களனி கிரிபத்கொட பகுதியில் இடம்பெற்ற கப்பம், இலஞ்சம் உள்ளிட்ட முறைகேடான அனைத்து சம்பவங்களுக்கும் அமைச்சர் மேர்வின் சில்வாவே முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

இந்த சம்பவங்களுக்கான ஆதாரங்களும் தம்மிடம் இருப்பதாகவும் இது தொடர்பில் யாருடனும் கதைக்க தாம் தயார். இனிவரும் காலங்களில் தமது உயிருக்கு ஏற்படும் அனைத்து அச்சுறுத்தல்களுக்கும் அமைச்சர் மேர்வின் சில்வாவே முழுப் பொறுப்பு கூறவேண்டும் என பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

தற்போது அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிராக போர்க்கொடி ஏந்தியுள்ள இவர்கள் கடந்த காலங்களில் அவருக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த பிரதேச சபை உறுப்பினரான ஹசித கெலும் மடவள கடந்த காலங்களில் நாம் முதுகொலும்பு அற்ற நிலையில் செயற்பட்டதாக குறிப்பிட்டார்.

மேலும் அமைச்சர் தற்போது தலைமறைவாகி உள்ளதாகவும் ஒளிந்து திரிவதாகவும் பிரதேச சபை உறுப்பினரான ஹசிதகெலும்சுட்டிக்காட்டினார். (ஏ)

# நுரைச்சோலை அனல் மின் நிலைய இயந்திர துறையில் மீண்டும் தீ விபத்து

(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தில் நேற்று அதிகாலை மீண்டும் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தீவிபத்தின் காரணமாக அனல் மின்சார நிலையத்தின் மின்சார உற்பத்திப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயந்திர அறையிலேயே தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒரு மாதத்துக்கு முன்னரும் நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தின் இயந்திர அறையில் தீவிபத்து ஏற்பட்டது. (அ-2)

# தங்காலை குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

தங்காலை- மெடில்ல பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் பிரித்தானியர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலான குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தங்காலை பிரதேச சபை தலைவர் உள்ளிட்ட 5 பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களை அடையாளம் காணும் அணிவகுப்பு 12 மணித்தியாலங்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

14 சாட்சியாளர்கள் குறித்த ஐந்து பேரை அடையாளம் காட்டியதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# சிவராம் கொலை வழக்கு ஏப்ரலுக்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளர் டி.சிவராம் கொலை வழக்கு குறித்த விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மீண்டும் ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்குத் தொடர்பில் முக்கியமான ஆறு சாட்சிகள் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கத் தவறியதாலேயே விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கியமான சாட்சிகள் விசாரணைகளின் போது சமுகமளிக்க முடியாத நிலை காணப்படுமாயின் விசாரணைகளை முன்னெடுப்பது சாத்தியமானதல்ல என அரச தரப்பு சட்டத்தரணி கேட்டுக் கொண்டதை அடுத்தே விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார்.

பிரபல ஊடகவியலாளரான சிவராம் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியில் வைத்து ஆயுதக்குழு ஒன்றினால் கடத்திச் செய்யல்லப்பட்டிருந்தார். மறுதினம் கொழும்பின் புறநகர்ப் பகுதியான சிறிஜெயவர்த்தனபுர பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. (ஏ-5)

# அழுக்கடைந்த நாணயத்தாள்களை மக்களிடமிருந்து வாபஸ்பெற திட்டம்

## மத்தியவங்கி ஆளுநர் தெரிவிப்பு

அழுக்கடைந்த நாணயத்தாள்களை மக்களிடமிருந்து நேரடியாக பெற்றுக் கொண்டு புதிய நாணயத்தாள்களை வழங்கும் நடவடிக்கையை இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கவுள்ளதாக மத்தி வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

10 ரூபா, 20 ரூபா, 50 ரூபா போன்ற குறைந்த பெறுமதி கொண்ட அழுக்கடைந்த நாணயத்தாள்களை மத்திய வங்கி அதிகாரிகள் சந்தைகள், பொருளாதார நிலையங்களுக்குச் சென்று நேரடியாகப் பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய நாணயத்தாள்கள் வங்கிகளைச் சென்றடைவது குறைவாகும். இதன்காரணமாக குறைந்த பெறுமதிகொண்ட நாணயத்தாள்களை மக்களிடமிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டு அதற்கு பதிலாக புதிய நாணயத்தாள்களை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அழுக்கடைந்த நாணயத்தாள்கள் பயன்படுத்துவது நாட்டின் மதிப்புக்கும் நல்லதல்ல. பொதுவாக சுற்றுலா பயணிகள் அழுக்கடைந்த நாணயத் தாள்களை விரும்பமாட்டார்கள் என குறிப்பிட்டுள்ளதுடன் நாணயத்தாள்களை தூய்மையாக பேணுவதன் அவசியம் குறித்து மக்களுக்கு அவ்வப்போது அறிவுறுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)




★1325-போர்த்துக்கல் மன்னனாக நான்காம் அல்ஃபொன்சோ முடிசூடினான்.

★1558-காலே (Calais) நகரத்தை இங்கிலாந்திடம் இருந்து பிரான்ஸ் கைப்பற்றியது.

★1598-ரஷ்யாவின் ஆட்சியை போரிஸ் கூதுனோவ் கைப்பற்றினான்.

★1608-வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுண் நகரம் தீயினால் அழிந்தது.

★1610-கலிலியோ கலிலி ஜூபிட்டர் கோளின் நான்கு இயற்கை செய்மதிகளைக் கண்டறிந்தார்.

★1782-அமெரிக்காவின் முதலாவது வர்த்தக வங்கி வட அமெரிக்க வங்கி திறக்கப்பட்டது.

★1789-ஐக்கிய அமெரிக்காவில் முதற்தடவையாக ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது.

★1841-யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழ் ஆங்கில மொழிகளில் ஆரம்பிக்கப்பட்டது.

★1894-வில்லியம் கென்னடி டிக்சன் அசையும் படத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★1927-அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்து முதலாவது தொலைபேசி செய்தி நியூயோர்க் நகருக்கும் லண்டனுக்கும் இடையில் அனுப்பப்பட்டது.

★1935-முசோலினி மற்றும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் பியேர்லாவல் ஆகியோர் பிரெஞ்சு- இத்தாலிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

★1942-இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சின் பட்டான் குடா மீதான தாக்குதல் ஆரம்பமானது.

★1950-அயோவாவில் மருத்துவமனை ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 41 பேர் உயிரிழந்தனர்.

★1953-அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ரூமன் ஐக்கிய அமெரிக்கா ஐதரசன் குண்டைத் தயாரித்திருப்பதாக அறிவித்தார்.

★1959-பிடல் காஸ்ட்ரோவின் புதிய கியூபா அரசை அமெரிக்கா அங்கீகரித்தது.

★1968-நாசாவின் சேர்வயர் 7 விண்கலம் ஏவப்பட்டது.

★1972-ஸ்பானிய விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 104 பேர் உயிரிழந்தனர்.

★1979-வியட்நாமியப் படைகளிடம் கம்போடியாவின் தலைநகர் புனோம் பென் வீழ்ந்தது. பொல் பொட்டும் அவனது கெமர் ரூச் படைகளும் பின்வாங்கின.

★1984-புரூணை ஆசியான் அமைப்பில் 6 ஆவது உறுப்பு நாடாக இணைந்தது.

★1990-பீசாவின் சாய்ந்த கோபுரத்தின் உட்பகுதி பாதுகாப்புக் காரணங்களுக்காக பொதுமக்களின் பார்வைக்கு மூடப்பட்டது.

### பிறப்புக்கள்

★1502-பாப்பரசர், 13 ஆவது கிரெகரி (இ.1585)

★1941-ஜோன் வோக்கர், ஆங்கிலேய இரசாயனவியலாளர்

★1948-இசிரோ மிசுகி, ஜப்பானியப் பாடகர்

★1979-பிபாசா பாசு, இந்திய நடிகை

### இறப்புக்கள்

★1943-நிக்கோலா தெஸ்லா, கண்டுபிடிப்பாளர் (பி.1856)


★1984-ஆல்பிரட் காஸ்லர், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு பௌதீகவியலாளர் (பி.1902)

★1998-விளாடிமிர் பிரெலொக், நோபல் பரிசு பெற்ற இரசாயனவியலாளர் (பி.1906)



★1925- அமரர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பிறந்த தினம் (இ.2008)





இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையின் புதுவருடக் கொண்டாட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகப் பொறுப்பாளர் எஸ்.பிரசாத் மங்கள விளக்கேற்றுவதையும் கலந்துகொண்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## ஊழியர் சேமலாப நிதிச்சட்டமூலம் குறித்து விரிவாக பேசப்பட வேண்டும்

### அவசரம் வேண்டாம் என்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதி தொடர்பான சட்ட மூலத்தை அவசரமாக நிறைவேற்றக்கூடாது என்றும் பின் கதவு வழியாக அரசாங்கம் சட்ட மூலங்களை கொண்டுவரக்கூடாது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஊழியர் சேமலாப நிதிச்சட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இந்தக் சட்டமூலத்தை அவசரமாக அமுல்படுத்துவது பொருத்தமாகாது. விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

சட்ட மூலத்தை அமுல்படுத்த அரசாங்கம் கடந்த ஆண்டு மேற்கொண்ட முயற்சி காரணமாக 21 வயது இளைஞரான ரொஷான் சானக உயிரைத் தியாகம் செய்ய நேரிட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## தங்கக்கட்டி மற்றும் நாணயத்தாள்களை சட்டவிரோதமாக கடத்தியோர் கைது

(கொழும்பு)

ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்கள் மற்றும் தங்கக்கட்டிகளை சட்டவிரோதமாக கடத்திய ஐந்து நபர்கள் நேற்றைய தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னைக்கு செல்லவிருந்த கண்டி ஹக்குரன பிரதேசத்தை சேர்ந்த 5 முஸ்லிம் நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களின் தலைவருக்கும் 45 வயதும் 20 தொடக்கம்25 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

30 இலட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்கள், யூரோக்கள், சவுதி ரியால், குவைத் தினார் முதலான வெளிநாட்டு நாணயத்தாள்களும் 20 இலட்சம் ரூபா பெறுமதியான உருக்கிய தங்கக் கூறுகளுமே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-2)

## புலி உறுப்பினரின் தகவலை மறைத்த நபருக்கு 18 ஆண்டுகள் கடூழிய சிறை

### கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் பற்றிய தகவல்களை மறைத்த நபருக்கு பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ்18ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த காப்புறுதி முகவர் ஒருவர் 2007ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரையில் இடம்பெற்ற பஸ் குண்டுத்தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் பற்றிய தகவல்களை மறைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே தண்டனையில் தளர்வு வழங்குமாறு சந்தேகநபர் கோரிக்கை விடுத்த போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்படும் நபர்களுக்கு எந்த வித சலுகைகளையும் வழங்க முடியாது என நீதவான் அறிவித்துள்ளார். (அ-2)

## அரசியல்வாதிகளின் தலையீட்டினால் கடமைகளை நிறைவேற்ற முடியவில்லை

### சட்டமா அதிபர் கருத்து

(கொழும்பு)

அரசியல்வாதிகளின் தலையீட்டால் கடமைகளை உரியமுறையில் மேற்கொள்ள முடியவில்லை என சட்டமா அதிபர் ஈவா வனசுந்தர தெரிவித்துள்ளார்.

உள்ளூர் அரசியல்வாதிகள் அடிக்கடி தம்மை சந்திக்க முயற்சிப்பதாகவும் தமது கடமைகளில் தலையீடு செய்வதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தங்காலை பிரதேசசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பல அரசியல்வாதிகள் இவ்வாறு தமது கடமைகளில் குறுக்கிடுவதாகத் தெரிவித்துள்ளார்.

தமது சட்டத்தரணியை சந்திக்காது நேரடியாக தம்மை அரசியல்வாதிகள் அடிக்கடி சந்திப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் குறித்த அரசியல்வாதிகளுக்கு அடிப்படை தகுதி கிடையாது என்பது புலனாகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் பதவி வகித்த சட்டமா அதிபர்களும் இந்த நிலைமைக்கு ஓர் காரணம் என அவர் குற்றம் சுமத்தியுள் ளார்.

கடந்த காலங்களில் பதவி வகித்த சட்டமா அதிபர்கள் இந்த வழக்கிற்கு அனுமதியளித்திருந்தனர் எனவும் தற்போது அரசியல் வாதிகள் இதனை தமது உரிமையாகக் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய முறையில் கடமைகளை மேற்கொள்ள அரசியல்வாதிகள் இடமளிப்பதில்லை எனவும் அவர்களும் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்வதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

## இந்திய வீட்டுத்திட்டத்தில் 50 ஆயிரம் வீடுகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு

### பிரதியமைச்சர் முரளிதரன்

இந்திய அரசாங்கத்தின் மூலம் இலங்கைக்கு கிடைக்கவுள்ள 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 5 ஆயிரம் வீடுகளும் மலையகத்துக்கு 5 ஆயிரம் வீடுகளும் வழங்கப்படவுள்ளதாக மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள கண் பார்வையற்றோர் தேசிய சங்கத்தின் கிழக்கு மாகாண கிளையின் அலுவலகத்துக்குச் சென்ற மீள்குடியேற்ற பிரதியமைச்சர் அங்கு கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

தேசிய கண்பார்வையற்றோர் சங்கத்தின் கிழக்கு மாகாண கிளையின் தலைவர் வடிவேல் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட சுதந்திரக் கட்சியின் மகளிர் அமைப்பாளருமான ருத்திரமலர் ஞானபாஸ்கரனும் கலந்து கொண்டனர்.

கண்பார்வையற்றோர் சங்கத்தின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தார். இங்கு தொடர்ந்து உரையாற்றி அவர், இப்பகுதியில் கண் பார்வையற்றவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான முதற்கட்ட நிதியாக ஐந்து இலட்சம் ரூபாவை ஒதுக்குகின்றேன். இதன்மூலம் அவர்களது சில தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

கண்பார்வையற்றோர் தொடர்பில் ஜனாதிபதி கவனம் எடுத்து வருகின்றார். இவர்களுக்கு மத்திய அரசாங்கத்தின் வேலை வாய்ப்புக்களில் ஐந்து வீதத்தை ஒதுக்க நடவடிக்கையெடுக்கப்படும்.

அத்துடன் இந்திய அரசாங்கத்தின் மூலம் இலங்கைக்கு கிடைக்கவுள்ள 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் மிகுதியாகவுள்ள 40 ஆயிரம் வீடுகளும் வடமாகாணத்துக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த மாத கடைசிப் பகுதியில் இங்கு வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தொடர்பிலான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார். அவ்வாறு வரும் கண் பார்வையற்றோருக்கும் முன்னுரிமை அடிப்படையில் வீடுகளை பெற்றுத்தர இலகுவாக இருக்கும்.

எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கண்பார்வையற்றோரின் பிரச்சினைகளை தீர்த்துவைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார். (அ-2)

## ரிசானாவை காப்பாற்ற உதவுமாறு தாயார் நீதிமன்றில் உருக்கம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரிசானா நபீக்கை காப்பாற்றுவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் பெற்றுத் தருமாறு அவரது தாயார் கடந்த 5 ஆம் திகதி மேல் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார். போலி ஆவணங்களை தயாரித்து ரிசானாவை வெளிநாட்டுக்கு அனுப்பிய நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரஸ்தாப நபரின் தாயாரால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமது குடும்பத்தில் நிலவிய கடும் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக தமது மகளை வெளி நாட்டு வேலைவாய்ப்பிற்காக அனுப்பியதாக சாட்சியம் அளித்த ரிசானாவின் தாயார் நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கடத்தப்பட்ட பாதுகாப்புப்படை வீரர்களை கொன்றுவிட்டோம்-தலிபான்கள் அறிவிப்பு

கடத்திச் செல்லப்பட்ட 15 பாதுகாப்புப் படை வீரர்களைக் கொன்று விட்டதாக தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தெற்கு வசிரிஸ்தான் பழங்குடியினப் பகுதியிலிருந்து கடந்த மாதம் கடத்தப்பட்டவர்களாவார்கள்.

இவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டதாக கைபர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெஹ்ரிக் இ தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் இத் தகவலைத் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர்களது சடலம் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் வீசப்பட்டுவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் இஷான் இந்த அறிவிப்பை தலிபான் அமைப்பின் தலைமை உறுதி செய்யவில்லை.

கடந்தாண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி இராணுவத்துக்கு எதிராக தலிபான் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலில் 15 பாதுகாப்பு படையினரைக் கடத்திச் சென்றனர்.

இவர்களை விடுவிக்க சிறையில் உள்ள சில தலிபான்களை விடுவிக்க வேண்டும் என அப்போது கோரிக்கை விடுத்திருந்தனர்.

கைபர் பகுதியில் தலிபான்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையைக் கண்டித்து தலிபான் அமைப்பினர் இத்தாக்குதலை மேற்கொண்டனர். இதுபோன்ற பல பழிவாங்கும் தாக்குதலை தொடர்ந்து மேற்கொள்ளப் போவதாக இஷான் தெரிவித்துள்ளார்.

தலிபான்களின் இந்த நடவடிக்கையால் பாகிஸ்தான் இராணுவத்திற்கும், தலிபான் அமைப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்புப் படையுடன் பேச்சுவார்த்தை தொடர்வ தாக தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பின் தலைவர் மௌலவி ஃபகிர் முகமது தெரிவித்த போதிலும் அதை இஷான் மறுத்துள்ளார். (அ-2)

# தீவிரவாதிகளை தடுக்க பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பு உருவாக்கம்

## அமெரிக்கா அறிவிப்பு

(வோஷிங்டன்)

தீவிரவாதிகளின் தொடர் தாக்குதல், அச்சுறுத்தல்போன்றவற்றைத் தடுக்க பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பு எனும் புதியஅமைப்பைஅமெரிக்கஅரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு எதிராக செயற்படும் அல்கொய்தா உட்பட அமைப்புக்களின் செயற்பாடுகளை கண்காணித்து உள்நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த அமைப்பின் செயற்பாடு இருக்கும்.

இந்த பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பினை அமெரிக்க வெளிவிவகாரத்துறை செயலர் ஹிலாரி கிளிண்டன் உருவாக்கியுள்ளார்.


இது குறித்து அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் டேனியல் பெஞ்சமின் கூறுகையில்,

இதன் நோக்கமே வெளிநாடுகளில் செயற்படும் தீவிரவாத குழுக்களின் செயற்பாடுகளைகண்காணித்துஅமெரிக்காவுக்கு எதிரான அதன் செயற்பாடுகளை முறியடிப்பது என்று தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புப் படை, அமெரிக்க உளவு நிறுவனம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இந்தஅமைப்புசெயற்படும்.

பயங்கரவாத குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை, அக்குழுக்களுக்கு உதவும் அமைப்புக்களை முடக்குதல் உட்பட பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்ளும்.

மேலும் கூட்டு நாடுகளுடன் இணைந்து தீவிரவாதக் குழுக்களை கட்டுப்படுத்தவும் தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்களுக்கு மாற்று வழிகளை ஏற்படுத்துவது உட்பட பணியை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)



சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத்தலைமை தளபதி கயானி (இடது) அந்நாட்டு பிரதமர் வென்ஜியாபோவை பீஜிங் நகரில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# பலரின் உயிரிழப்புக்கு காரணமான முபாரக்கிற்கு தூக்குத்தண்டனை?



எகிப்தில் சர்வாதிகார ஆட்சி செய்த முபாரக்கிற்கு எதிராக கடந்த ஆண்டில் மக்கள் புரட்சி ஏற்பட்டது.

புரட்சியின் போது போராட்டம் செய்தவர்கள் மீது இராணுவத்தை ஏவி அப்பாவி பொது மக்களை முபாரக் கொலை செய்தார். இதைத் தொடர்ந்து போராட்டம் வலுப்பெறவே ஆட்சியை விட்டு விலகிய முபாரக் தலைமறைவானார்.பின்னர் கைது செய்யப்பட்ட அவர் தற்போது சிறையில் உள்ளார்.

முபாரக் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கு'தற்போது நடந்து வருகிறது.போராட்டத்தின் போது அவர் நினைத்திருந்தால் மக்களின் உயிரிழப்பைத் தடுத்திருக்கலாம்.

ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.எனவே இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் பலரின் உயிரிழப்புக்குக் காரணமான முபாரக்கிற்கு தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டதாக தலைமை வழக்கறிஞர் சியுலிமன் தெரிவித்தார். (அ-2)

# பின்லேடன் குறித்த ஆவணங்கள் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன

பாகிஸ்தானில் உள்ள அபோதாபாத் நகரில் பதுங்கி இருந்த பின்லேடனை அமெரிக்க அதிரடிப் படையினர் கடந்த மே மாதம் சுட்டுக் கொன்றனர்.

அதன் பின்னர் அவர் தங்கியிருந்த 3 மாடி வீட்டில் இருந்து ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ஆவணங்கள், சில கணனி சி.டி.கள் போன்றவை கைப்பற்றப்பட்டன.

இதற்கிடையே பாகிஸ்தானில் பின்லேடன் பதுங்கி இருந்தது குறித்து விசாரிக்க ஒரு குழுவை பாகிஸ்தான் அரசு அமைத்தது.

இந்த நிலையில் பின்லேடன் வீட்டில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை அழிக்குமாறு பாகிஸ்தான் அரசிடம் அந்த குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அவை அனைத்தும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. வசம் இருப்பதாக கருதப்படுகின்றது. அரேபிய மொழியில் உள்ள அந்த ஆவணங்களை மொழி பெயர்க்கும் பணி நடைபெறுவதாகவும் மூன்று மாதங்களுக்குள் அந்த பணி நிறைவடையும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு 6 பேர் உயிரிழப்பு;10 பேர் காயம்

நைஜீரியாவில் கோம்பே நகரத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தில் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது.

அதில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். அப்போது அங்கு துப்பாக்கியுடன் ஒரு மர்ம மனிதன் புகுந்து தான் வைத்திருந்த துப்பாக்கியால் சரமாரியாக சுட்டான்.

அதில் தேவாலயத்தின் கண்ணாடி ஜன்னல்கள் உடைந்து நொறுங்கின. இதனால் பீதியும் அதிர்ச்சியும் அடைந்த மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடினர்.

அதை தொடர்ந்து கூட்டத்தினர் மீது அவன் சுட்டான். அதில் 6 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். 10 பேர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவத்தில் பொகோ காரம் என்ற அமைப்பை சேர்ந்த தீவிரவாதி ஈடுபட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது. (அ-2)

# தங்கச்சுரங்கத்தில் நிலச்சரிவு; 25 பேர் பலி 100 இற்கும் மேற்பட்டோரை காணவில்லை

## பிலிப்பைன்சில் துயரம்



பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதியில் தங்கத்தை தேடும் பணியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட திடீர் நிலச்சரிவு காரணமாக 25 பேர் பலியாகினர். மேலும் 100 இற்கும் மேற்பட்டோரை காணவில்லை.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதியில் உள்ள மின்டோனா தீவில் நாப்னாப் பேன் பகுதி உள்ளது. இங்கு பல ஆண்டுகளாக தங்க கனிமத்தை தேடும் பணியில் நூற்றுக்கணக்கோர் ஈடுபட்டனர்.

அதனால் அப்பகுதியே கரைந்து நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ள பகுதி என கடந்தாண்டு அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த எச்சரிக்கையை பொருட்படுத்தாமல்நூற்றுக்கணக்கானோர் தங்கத்தை தொடர்ந்து தேடி வருகின்றனர்.

இப்பகுதியில்நேற்று முன்தினம் காலை திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது. இதையடுத்து பல்வேறு இடங்களில் இருந்து வந்த மீட்பு படையினர் பல மணி நேரம் போராடி 15 பேர்களது உடல்களை வெளியே எடுத்தனர்.

இவ்விபத்து குறித்து அங்கு மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ள இராணுவ கர்னல் லிண்டன் பனிசா கூறுகையில்,

அப்பகுதியில் 50 சிறிய குடில்களில் மக்கள் வசித்து வந்தனர். மேலும் 7 ஆயிரத்து 500 சதுர மீற்றர்பரப்பளவில் பொதுமக்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது சம்பவம் நடந்துள்ளது.

தங்க கனிம வளத்தை எடுக்க கோடரி, மண்வெட்டி போன்ற சாதாரண கருவிகளையே இவர்கள் பயன்படுத்தினர் என்றார். (அ-2)




# பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவம் திரைப்படமாக ஒக்டோபர் மாதத்தில்

(வோஷிங்டன்)

அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் பின்லேடன், பாகிஸ்தான் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த போது அமெரிக்க இராணுவம் அவரை சுட்டுக் கொன்றது. இந்தச் சம்பவம் சினிமா படமாக தயாரிக்கப்பட்டுள்ளது. ஒஸ்கார் விருது பெற்ற இயக்குனர் காதரின் பிஜெலோ இப்படத்தை இயக்கியுள்ளார். இப்படம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வெளியிடப்படுகின்றது.

பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் குறித்து தனக்கு சில தகவல்களை தந்து உதவும்படி இயக்குநர் காதரின் பிஜெலோ அமெரிக்க உளவுத்துறை மற்றும் இராணுவ தலைமையத்துக்கும் கடிதம் எழுதியதை அடுத்து அவர் கொல்லப்பட்ட போது நடந்த சில நிகழ்வுகள் குறித்த தகவல்களை அவர்கள் தந்து உதவியதாக கூறப்படுகின்றது.

இதற்கு எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியை சேர்ந்த எம்.பி. பீட்டர்கிங் கடும் கண்டனமும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளார்.

பின்லேடன் கொல்லப்பட்டது குறித்து இரகசிய தகவல்களை வெளியிட்டதன் மூலம் இச்சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவத்தின் சீல் 6 ஆவது பிரிவினரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என புகார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# கடத்தல் கும்பல்களிடையே மோதல்; 31 கைதிகள் பலி

மெக்சிக்கோ நாட்டின் வடக்கு கடற்கரை பகுதியில் உள்ள தாமாலுபாஸ் என்ற இடத்தில் ஏராளமான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் போதைப் பொருள் கடத்தல் குற்றங்களில் பிடிபட்டவர்களும் இருக்கிறார்கள். அங்கு இரு கடத்தில் கும்பல்கள் இடையே திடீரென்று மோதல் ஏற்பட்டது.

இரு தரப்பினரும் கத்தியால் குத்தியும் உள்ளூர் வெடி குண்டுகளை வீசியும் ஒருவரை ஒருவர் தாக்கினர். பல மணிநேரம் நீடித்த இந்த கலவரத்தில் 31 கைதிகள் கொல்லப்பட்டனர்.மேலும் 13 கைதிகள் படுகாயம் அடைந்தனர். சிறைச்சாலையில் இதுபோல கைதிகள் மோதிக் கொள்வது அங்கு சர்வசாதாரணமான சம்பவமாகும். (அ-2)

# இனப்பிரச்சினை தீர்வில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும்

## பிரிட்டன் எம்.பிக்களிடம் பிரபா எம்.பி. எடுத்துரைப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்திவராமை மிகவும் கவலைக்குரிய விடயம் என கொழும்பு மாவட்ட நாடாளுமன்றில் பிரபாகணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு-பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில்தூதரக அரசியல் மற்றும் அபிவிருத்தி பிரிவின் இரண்டாம் நிலை செயலாளர் திருமதி ஷாராமான் மற்றும் அவரது செயலாளர் எஸ்மா ஆகியோருடனான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய மாவட்டங்களை விட கொழும்பு மாவட்டத்தில் இந்திய வம்சாவளி தமிழர்கள், வடகிழக்கு தமிழர்கள் என இரண்டு பிரிவினரும் வாழ்கின்றனர். இதனால் அபிவிருத்தி மட்டுமன்றி தேசிய இனப்பிரச்சினை தீர்விலும் முழுமையான அக்கறை செலுத்தி வருகின்றேன்.

யுத்தத்திற்கு பின்னரான இனப்பிரச்சினை தீர்வில் நாம் அக்கறையாகவுள்ளோம். 13 ஆவது திருத்த சட்டத்திற்கு அப்பாற் சென்று இனப்பிரச்சினைக்கு தீர்வை காண வேண்டும். விடுதலைப் புலிகள் பலம் மிக்கவர்களாக இருந்த பொழுது அரசாங்கம் பெடரல், சமஸ்டி முறை தீர்வை வழங்கவிருந்ததை இன்று மறந்து விடக்கூடாது.

தமிழ்த்தேசியகூட்டமைப்பினரிடம் மட்டும் அரசாங்கம் பேசுவதன் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. பேச்சுவார்த்தை மேடைக்கு செல்லும் கூட்டமைப்பினரும் வெளிப்படைத் தன்மையின்றி செயற்படுகின்றனர். ஏனைய கட்சிகளினதும் அமைப்புக்களினதும் ஆலோசனைகளைப் பெறுவதில்லை.

வடமாகாண சபை தேர்தலை அரசாங்கம் நடத்துவதில் எமக்கு எவ்விதமான உடன்பாடும் கிடையாது. வடமாகாண தேர்தலின் பின்பு அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வை நோக்கிச் செல்லாது என்பதை நாம் அறிவோம். அரசாங்கத்திற்குள் இருக்கும் இனவாத கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களின் கருத்துக்களுக்கு அரசாங்கம் பதிளிப்பதில்லை.

அரசாங்கத்துடன் கூட்டமைப்பினர் பேச்சுவார்த்தை நடத்தும் பொழுது முழுமையான இனப்பிரச்சினை தீர்வை காண்பதற்கு முன்பு இடைக்கால தீர்வாக இன்று சிறைச்சாலைகளிலுள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்களின் விடுதலை, நாடு முழுவதிலும் தமிழ்மொழி அமுலாக்கல், இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம் போன்ற உடனடி தீர்விற்கான விடயங்களை உள்வாங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தையும் தாண்டியுள்ளது

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

நாட்டில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தை தாண்டியுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

கொள்கை ரீதியாக நாய்களை கொல்லாது அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இவ் அமைச்சு குறிப்பிடுகின்றது.

இதற்காக வருடாந்தம் 100 கோடி ரூபா செலவிடப்படுகின்றது. கட்டாக்காலி நாய்களின் கடிக்குள்ளாகும் இரண்டாயிரம் சம்பவங்கள் நாளாந்தம் பதிவதாக அமைச்சு சுட்டிக் காட்டுகிறது.

இருப்பினும் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கையை குறைக்க இதுவரை மேற்கொள்ளப்பட்ட எவ்வித நடவடிக்கைகளும் வெற்றியளிக்கவில்லையென அமைச்சு குறிப்பிடுகிறது.அதற்கானமாற்று நடவடிக்கைக்கு தேவை ஏற்பட்டுள்ளதாகசுகாதாரஅமைச்சுமேலும் சுட்டிக்காட்டுகிறது. (அ-2)

## ஆருத்திராபிஷேகம்

(இருபாலை)

குப்பிளான் கடற் கரைக் கற்பக விநாயகர் திருக்கோயில் நடேசப் பெருமானுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி ஓதலுடன் பூஜை ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 108 சங்காபிஷேகம் நடைபெற்று திருப்பொன்னூஞ்சலும் திருவீதியுலாவும் ஆருத்திரா தரிசனமும் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-136)

# பசிலுக்கு நண்பர்களை விட எதிரிகளே அதிகம்- விக்கிலீக்ஸ்

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமான ஆலோசகர்கள் எவரும் இல்லை. இலங்கையில் அவருக்கு நண்பர்களை விட எதிரிகள்தான் அதிகம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அனுப்பிய இரகசிய தகவல் குறிப்பில் உள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு மே 15 ஆம் திகதி கொழும்பில் இருந்த அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்கினால் அனுப்பி வைக்கப்பட்ட இந்த தகவல் குறிப்பை விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பசில் ராஜபக்ஷ ஆட்களை விலைக்கு வாங்கும் பழக்கத்தைக் கொண்டவர் என்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சில் பணியாற்றிய போது ஒவ்வொரு திட்டத்திலும் தனக்கு 10 வீதம் தரகுப் பணம் கேட்பதால் பசில் ராஜபக்ஷ திருவாளர் பத்து வீதம் என்ற செல்லப் பெயரை சம்பாதித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான அரசியல் விவகாரங்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்தவுடன், பசில் ராஜ பக்ஷவுடன் தான் கலந்துரையாடுகிறார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது தமிழ் வாக்குகளை நசுக்குவதற்கு விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு செய்து கொண்டது மற்றும் 2007 இல் அமைச்சரவை மாற்றம். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைஆளும்கட்சிக்குள் இழுத்துக் கொண்டது போன்றவற்றில் பசில் ராஜபக்ஷ செல்வாக்கு செலுத்தியுள்ளார் எனவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

1970 ஆம் ஆண்டு பெலியத்தை தொகுதியில் ஜனாதிபதி முதல் முறையாகப் போட்டியிட்ட போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்த பசில் அவருக்கு ஆதரவாகப் பணியாற்றியிருந்தார். ஆனால், 1977 இல் ஐ.தே.கவில் இணைந்த அவர் தனது சகோதரருக்கு எதிராகவே வேலை செய்தார்.

தற்போதுள்ள பதவியிலும் கூட அவர் குறிப்பிடத்தக்க ஊழல்களை செய்துள்ளதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளதாகவும் றொபேட் ஓ பிளேக் அனுப்பிய தகவல் குறிப்பில் உள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

(அ-2)

# லலித்,குகன் விடுதலையை வலியுறுத்தி சுவரொட்டிப் போராட்டம் நாளை நடைபெறும்

## மக்கள் போராட்ட இயக்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் போராட்ட இயக்கம் யாழ்மாவட்டத்தில்நாளைய தினம் சுவரொட்டிப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கடந்த டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக காணாமல் போனவர்களைக் கண்டு பிடித்து தருமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்வதற்கென மக்கள் போராட்ட இயக்கத்தை சார்ந்த லலித் குமார்வீரராஜ் ,குகன் முருகானந்தன் ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்திற்கு கடந்த டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி வந்திருந்தனர்.

அன்றைய தினம் மாலை 5 மணியளவில் ஆவரங்கால் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து யாழ். நகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது இவர்கள் இருவரும் காணாமல் போயுள்ளனர் என யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் மக்கள் போராட்ட இயக்கத்தினால் மறு நாள் முறைப்பாடு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட இருவரும் காணாமல்போய் நேற்றுடன் 28 நாட்கள் ஆகின்றன. இருப்பினும் இது வரை எந்தவிதத் தகவல்களும் வழங்கப்படவில்லை என மக்கள் போராட்ட இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனாலேயே தாம் நாளைய தினம் சுவரொட்டி போராட்டத்தினையும் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகிக்கவுள்ளதாக தெரிவித்தனர்.

அத்தோடு காணாமல் போன இருவரும் யாழ். குடாநாட்டில் மேற்கொண்டு வந்த மக்கள் சேவைகளையும் வெளிப்படுத்தவுள்ளதோடு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளதாகவும் அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (அ-6)

# சட்டக் கல்லூரி அனுமதி பரீட்சையில் சிங்கள மாணவர்களுக்கு அநீதி

## மாணவர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டக் கல்லூரி அனுமதிக்கான பரீட்சையில் சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சட்டக் கல்லூரி அனுமதிக்காக சிங்களமொழி மூலம் 5 ஆயிரத்து 511 மாணவ, மாணவியர் பரீட்சைக்கு தோற்றியதாகவும் இதில் 133 பேர் மட்டுமே சித்தி அடைந்துள்ளதாகவும் தமிழ் மொழி மூலம் 606 பேர் பரீட்சைக்கு தோற்றி இதில் 73 பேரும் ஆங்கில மொழி மூலம் 235 பேர் பரீட்சைக்கு தோற்றி இதில் 35 பேரும் சித்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழி மூல மாணவர்களின் 12.2 வீத மானவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் ஆங்கிலமொழி மூல மாணவர்களில் 13.6 வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இந்தப் புள்ளி விபரங்கள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக சிங்கள மொழி மூல மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்களுக்கு விசேட சலுகை அளிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட முஸ்லிம் மாணவரின் அருகில் இருந்து பரீட்சை எழுதிய பலர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த தமிழ் மாணவர்களில் பலர் ஒருவருக்கு ஒருவர் அருகில் இருந்து பரீட்சை எழுதியவர்கள் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கும் நீதி அமைச்சிற்கும் முறைப்பாடு செய்ய திட்டமிட்டுள்ளதாக சிங்கள மொழி மூல மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)


ஈழத்துச் சிதம்பர சிறப்பம்சம்



ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனி காணவாரீர்

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானை மனையாட்டி
கட்டுக்குள் கைகட்டி நின்றானை கணக்கின்றி
பிரம்படிகள் பெற்றானை பேசும் திருவாசகத்தில்
தரம் காத்து வாழ்வானை தமிழ் காத்து ஆள்வானை
இடுகாட்டில் கூத்தாடி இரவெல்லாம் அலைவானை
இடும்பாவனத்தில் இறையாக்கிக் காப்பானை
முல்லைமலர் போல முத்தமிழைப் பூப்பானைத்
தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்வானை
கங்கைத் தலையானைக் கருநீலம் உண்டானை
மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தானை
பற்றெல்லாம் விட்டுப் பரதேசி ஆனானை
கற்றைச் சடையானை கைலாய மலையானை
சுடலைப் பொடியானைச் சுடுகாட்டில் கிடப்பானை
கடலை நிகர்த்த கருணை மனத்தானை
காளைக் கொடியானை கயற்கண்ணி அம்மையை
ஆளும் நாயகனை ஆடலிலே வல்லானை
ஆனைத்தோல் புலித் தோலால் அங்கம் மறைத்தானை
வானை அளந்தானை வண்டமிழைக் காப்பானை
வில்லடியும் கல்லடியும் சொல்லடியும் விருப்புடன்
நல்லடியாய்ப் பெற்றானை நச்சரவம் பூண்டானை
ஈழத்து சிதம்பரத்தில் தேரினில் காண்போம் வாரீர்





மதுரகவி.காரை எம்.பி அருளானந்தன்

இன்று(2012.01.07) திருவெம்பாவை 9 ஆம் நாள்

விளம்பர அனுசரணை: சிவனடியான் (சி-5411)

நாம் முன்னேற நட்பு ஒரு படிக்கட்டாக அமையட்டும். ~ ஆபிரிக்க பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வெளிநாட்டுத் தூதுவர்கள் இந்து சமயத்தை ஓரங்கட்டுவது ஏன்?

யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள், கத்தோலிக்க மதம் சார்பில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயரை சந்தித்து குடாநாட்டு நிலைமைகளைக் கேட்டறிந்து கொள்வர்.

ஆனால், அவர்கள் எவரும் இந்து மதத் தலைமைகளை ஒருபோதும் சந்திப்பதில்லை.

இதற்கான காரணம் என்ன என்று இந்து சமயத்தில் இருக்கக்கூடிய மதத் தலைமைகள் சிந்திப்பதும் இல்லை.

வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்து என்ன பயன்? ஆகையால் நாங்கள் அதுபற்றி அதிகம் அலட்டிக்கொள்வதில்லை என்று யாரேனும் கூறிக் கொள்ளலாம் .ஆனால் அதனை ஒரு தக்க பதிலாக ஏற்றுக் கொள்ள முடியாது.

நேற்று முன்தினம்கூட பிரித்தானியத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர்.

அவர்கள் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயரைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர்.

யாழ்.ஆயரும் நிலைமைகளை தெளிவாக அவர்களிடம் எடுத்துக் கூறியிருந்தார். நல்ல விடயம்.

எனினும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பிரித்தானிய தூதுவர்கள் இந்து சமயத் தலைமைகளை சந்திக்கவில்லை.

சிலவேளைகளில் இன்னும் பத்து பன்னிரண்டு வருடங்களில் இலங்கையில் இந்து சமயம் என்பதை கத்தோலிக்கமாக மாற்றி விடுவோம். ஆகையால் இந்து சமயத்திற்கு முன்னுரிமை கொடுக்காமல் விட்டுவிடலாம் என்ற நினைப்பில் வெளிநாட்டுத் தூதுவர்கள் அங்ஙனம் நடந்து கொண்டனரா? அல்லது யாழ்ப்பாண அரச அதிபர் இந்து சமயத் தலைமைகள் பற்றி தெரியாமல் அல்லது நினைப்பில் கொள்ளாமல் விட்டுவிட்டாரா? என்ற கேள்வி இந்துக்களிடையே எழுந்துள்ளது.

தென் பகுதிக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டுக் குழுக்கள் மரியாதைக்கேனும் பௌத்த பீடாதிபதிகளை சந்திக்கின்றனர்.

அவ்வாறு அவர்களை சந்திக்க தவறினாலும் கூட இந்த நாட்டின் ஆட்சி அதிகாரம் பௌத்த பீடங்களின் காலடிகளில் கட்டுண்டு இருப்பதால் அதுபற்றி அலட்டிக் கொள்ளவும் தேவையில்லை.

நிலைமை இதுவாக இருக்க, வட பகுதிக்கு வருகின்ற வெளிநாட்டுக் குழுக்கள் வடக்கின் பெரும்பான்மையாக இருக்கக்கூடிய இந்து சமயத் தலைமைகளை சந்திக்காமல் தனித்து கத்தோலிக்க தலைமையை மட்டும் சந்தித்து விட்டுச்செல்கின்றன.எப்படி இருக்கிறது நிலைமை?

இந்து சமயம், மக்கள், அதன் சமகால நிலைமைகள்; அதுபற்றி எல்லாம் கதைக்கவும் பேசவும் யார் உள்ளனர்?

இதை இவ்விடத்தில் கூறும்போது சிலர் விவாதித்துக் கொள்ளலாம். அவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்ல முடியும்.

உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள். கத்தோலிக்க மதத் தலைமையைச் சந்தித்தால் இந்து மதத் தலைமைகளைச் சந்திக்கக் கூடாதா?

முதலில் இங்குள்ள சமயவாதத்தை நீக்கிக் கொள்வோம். அதன் பின்னர் இனவாதத்தை கண்டிப்போம். அப்போதுதான் இறைவனும் எமக்கு உதவுவான்.

# கண்டாவளை பி.செ.கிராமங்களுக்கு தொடர்ந்தும் நீர்ப்பாசன வசதி

## சந்திரகுமார் எம்.பி. உறுதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கல்மடுக்குளத்தின் கீழ் தொடர்ந்தும் தர்மபுரம், நாகேந்திரம் கிராமங்களுக்கும் விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவர் மு.சந்திரகுமார் குறித்த விவசாய அமைப்புகளிடம் தெரிவித்துள்ளார்.

கல்மடுக்குளத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் நிலைமைகளை நேரில் ஆராய்ந்ததோடு அங்கிருந்த மக்கள் அமைப்பு பிரதிநிதிகளிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்மடுக்குளம் தற்போது முன்னரைவிட அதிகளவு நீர் கொள்ளளவு கொண்ட குளமாக புனரமைக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இரணைமடுக்குளத்திற்கு அடுத்தபடியாக தற்போது கல்மடுக்குளம் காணப்படுகின்றது. முன்பு இருபத்திரொரு அடி உயரம் வரை நீரைக் கொண்ட குளமாக இருந்தது.

ஆனால் தற்போது இருபத்து நான்கு அடி உயரம் வரை நீரைக் கொள்ளக்கூடிய குளமாக மீள் புனரமைக்கப்பட்டுள்ளது.

எனவே எந்த மக்களும் பாதிக்கப்படாத வகையில் இக்குளத்தின் கீழான நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படும். 107 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக்குளம் பிரதேச மக்களின் எதிர்காலத் தேவையினையும் கருத்தில் எடுத்தே மீள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

எனவே தர்மபுரம், நாகேந்திரபுரம் உள்ளிட்ட வழமையாக நீர் விநியோகம் இடம்பெற்ற அனைத்துப் பிரதேசங்களுக்கும் சீரான நீர் விநியோகத்தை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# ஆங்கில பாடநெறி ஆசிரிய மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை

தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இவ்வாண்டிற்கு ஆங்கிலப் பாடநெறிக்கு தேர்வு பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தெரிவான மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

எம்.ஜே.சேவியர் (சுண்டுக்குளி தெற்கு), எஸ்.சிவசோதிராஜா (நவாலி கிழக்கு), கே.தாரணி (ஆனைப்பந்தி), ஆர்.தனுசா (நல்லூர்), ரி.கௌசிகன் (கந்தர்மடம்), எஸ்.சர்சன்ஜா (கர வெட்டி), எஸ். பிருந்தா (கோண்டாவில்), ரி. தர்மிகா (ஆவரங்கால் மேற்கு), கே. ஜானகி( முஸ்லிம் கல்லூரி வீதி), ஜே. துருமராசா (சுன்னாகம் மேற்கு), எஸ். டென்சி (ஆனைப்பந்தி), ரி. கயானினி (சாவகச்சேரி வடக்கு),ஏ.ரி. ருக்மன் நிசுதன் (இரண்டாம் குறுக்குத் தெரு), எம்.தர்சிகா (சுன்னாகம்), எஸ். ராஜேந்திரன் (அரியாலை),வை. பிரபா லினி (இணுவில் கிழக்கு), எஸ்.துவாரகா (கொக் குவில்), ஐ.சி.எஸ். அருமைநாயகம் (பண்டத்தரிப்பு),எம்.ஜனனி (வட்டு.கிழக்கு), எம்.துசீவன் (டச்சு வீதி, சாவகச்சேரி), வி.வினோதினி(ஓட்டுமடம்)

# திருவெம்பாவை 09



திருச்சிற்றம்பலம்
முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்
பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்
பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்கியேல்
என்ன குறையும் இலோமெலோர் எம்பாவாய்
திருச்சிற்றம்பலம்

**தோழியர்:-** உலகத்தில் வசிக்கும் எல்லா உயிர்களுக்கும் முதன்மையாக விளங்குகின்ற பரம்பொருளே! இப்போது இருக்கும் உயிர்களைத் தவிர இனி வரப்போகும் உயிர்களுக்கு அறிய முடியாத நூதனத் தன்மை கொண்டவனே. அப்படிப் பெருமை பெற்ற உன்னை எங்களது தலைவனாக ஏற்று, பாராட்டி, பாட, நாங்கள் எவ்வளவு தவம் செய்தோமோ தெரியவில்லை. சிவபெருமானின் அடியார்களுக்கு எல்லாம் தலைவரே! எங்கள் மணாளன் என்று கூறி அவர்களின் கடைக்கண் பார்வைக்கு ஏற்ப ஊழியம் செய்து மகிழ்ச்சியடைவோம். அப்படி ஊழியம் செய்யும் பேற்றை எங்களுக்குத் தந்தால் வேறு என்ன குறை இருக்கப் போகிறது.

(இன்று திருவெம்பாவை ஒன்பதாம் நாள்)

# வருகைதரு விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு 2012 ஆம் கல்வி ஆண்டுக்கு உயர் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கு வியாபாரத் தொடர்பாடல் ஆங்கிலம் (Business Communication English) பாடத்திற்கு வருகைதரு விரிவுரையாளர் பதவி வெற்றிடமாகவுள்ளதாக இயக்குநர் வி.எஸ்.விஜயநாதன் அறிவித்துள்ளார்.

இப்பதவிக்கு தகைமையானவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்னர் நிறுவனத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி இல.665/2, கடற்கரை வீதி, குருநகர் எனும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## சுறுசுறுப்பாகத் திகழுங்கள்



நம்முடைய உடலையும் அறிவையும் ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிவிடவேண்டும்.

பிறருடைய தவறு எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அதுபற்றி பேசக்கூடாது. அப்படிச்செய்வதனால் நீங்கள் அவனுக்கு கேடு செய்வதுடன் உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

தன்னை அடக்கத் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அவனே உலகில் நன்றாக வாழ தகுதியுள்ளவன்.

எதிலும் பரபரப்பு தேவையில்லை ஆனால், சுறுசுறுப்பு எப்போதும் தேவை.

கீழ்ப்படிதல், முயற்சியுடைமை, செயலாக்கம் ஆகிய மூன்றும் இருந்தால் ஒருவன் வெற்றி பெற்று முன்னேறுவதை எதனாலும் தடுக்க முடியாது. உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் உங்களையும் என்னையும் போன்ற மனிதர்களே. வீரம் மட்டும் இருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும். இயந்திரங்கள் மனித சமூகத்திற்கு சுகத்தைக் கொடுத்தவையுமல்ல கொடுக்கப் போவதுமில்லை.

# 2012 புத்தாண்டு பலன்கள் உங்களுக்கு எப்படி? 11



அவிட்டம் 3 ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம்

## கும்பம்

"ஜோதிடக் கலைமாமணி" சிவல்புரி சிங்காரம்

### எடுக்கும் முடிவுகள் வெற்றிதர இறையருள் ஒன்றே துணை நிற்கும்!

2012 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம்வரை உங்களின் தைரிய ஸ்தானா இராசியில் சஞ்சரிக்கும் குருபகவான், நீங்கள் விரும்பும் பொருட்களை உங்கள் கைகளில் விழச் செய்வார். நண்பர்கள் உங்களுக்கு உதவிக்கரமாக இல்லாவிட்டாலும் கவலைப்படமாட்டீர்கள். மனத் தெளிவுடன் செயற்படுவீர்கள். உங்களின் யோசனைகள் மற்றவர்களுக்கு உபயோகமாக இருக்கும். செய்தொழிலில் நிறைய மாற்றங்களைக் காண்பீர்கள். உங்களின் தனித்தன்மை பளிச்சிடும். நிரந்தர வருமானம் வரத்தொடங்கும். பூர்வீகச் சொத்துக்கள் கைவந்து சேரும். குழந்தைகள் உங்களுக்கு உதவிக்கரமாக இருப்பார்கள். அவர்களால் எந்தப் பெரிய செலவும் உண்டாகாது. புதிய வீடு, வாகனம் போன்றவற்றை வாங்குவீர்கள். சமூகத்திற்கு உதவும் பொது நலக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

மே மாதத்திற்குப்பிறகு ஜூலை மாதம் வரையில் உள்ள காலகட்டத்தில் உங்கள் அன்னையின் நலனில் முன்னேற்றம் ஏற்படும். தாயின் சந்தோஷத்திற்காக உங்களின் சந்தோஷத்தைக் குறைத்துக் கொள்வீர்கள். புதியவர்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். சகோதர, சகோதரிகள் ஆதரவு குறைந்தாலும் பெற்றோரின் நல்லாதரவால் அவர்கள் கட்டுப்படுத்தப் படுவார்கள். நல்லவர்களை இனம் கண்டு அவர்களுடன் நட்புக் கொள்வீர்கள். உங்களை பகடைக்காயாக பயன்படுத்தியவர்களை நீங்கள் பகடைக் காயாக ஆக்கும் சூழ்நிலை உண்டாகும்.

இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஆண்டு இறுதிவரை உங்களின் ஆன்மீகபலம் உயரும். உங்களின் செயல்களை தெய்வத்தின் துணைகொண்டு முடிப்பீர்கள். பொருளாதாரம் உயரும். புதிய சேமிப்புத் திட்டங்களில் ஈடுபடுவீர்கள். உங்களின் மனவலியும் உடல்வலியும் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறைவு வராது. உங்களைச் சார்ந்தவர்களின் செல்வாக்கு உயரும். இதனால், குடும்பத்தின் பெயரும், புகழும் பிரபலமாகும். இல்லத்தில் திருமணம்போன்ற சுபகாரியங்கள் நடக்கும். குடும்பத்தாருடன் வெளியூர், வெளிநாடுகளுக்குச் சென்று வருவீர்கள். உங்களிடம் ஏதோ சக்தி இருக்கிறது என்று நினைத்து எதிரிகள் கூட உங்களின் நட்பு நாடி வருவார்கள். தர்மகாரியங்களுக்குச் சிறிது செலவு செய்வீர்கள். உங்களின் நிர்வாகத் திறமையும், சமயோசித புத்தியும் உங்களை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்லும் ஆண்டாக இது அமைகிறது.

உத்தியோகஸ்தர்கள், அலுவலக வேலைகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். இதனால் மேலதிகாரிகளிடம் நற்பெயர் வாங்குவீர்கள். எதிர்பார்த்திருந்த பதவிஉயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். திட்டமிட்ட வேலைகளைக் குறித்த காலத்திற்குள் முடித்து விடுவீர்கள். சக ஊழியர்களும் உங்களுக்கு உதவிக்கரமாக இருப்பார்கள். ஆனாலும், அலுவலக ரீதியான பயணங்களைத் தவிர்க்க முடியாமற்போகும்.

வியாபாரிகள், நல்லவர்களுடன் கூட்டுச் சேர்வீர்கள். வியாபாரத்தில் நஷ்டங்கள் வராது. வாராத கடன் என்று நினைத்திருந்தவை திரும்பி வந்து உங்களை ஆச்சரியப் படுத்தும். ஆனாலும் கணக்கு வழக்குகளை சரியாக அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவும். புதிய சந்தைகளை தேடிப்பிடித்து அங்கும் வியாபாரத்தை பெருக்கி இலாபம் அடைவீர்கள். உங்கள் முயற்சிகளை கூட்டாளிகளிடம் விளக்கி விட்டு செயற்படுத்துவீர்கள்.

இது உங்களின் தனித்தன்மையை வெளிப்படுத்தும். சமுதாயத்தில் உங்களின் செல்வாக்கு உயரும்.

விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். புதிய நிலம் குத்தகைக்கு வந்து சேரும். மேலும் கூடுதல் வருமானத்தைப் பெற காய்கறிகள், பழங்கள், கிழங்குகள் என பயிர்செய்து பலன் பெறவும். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்கு தக்க உதவிகளைச் செய்யவும் விவசாயத்தைப் பெருக்க புதிய உபகரணங்களை வாங்குவீர்கள்.

அரசியல்வாதிகளுக்கு கட்சி மேலிடத்தின் ஆதரவு நன்றாக இருந்தாலும் புதிய பொறுப்புக்களைப்பெற முடியாது. உங்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் உங்களுக்குச் சாதகமாகவே முடிவடையும். கட்சி மேலிடத்திற்கு தகவல் அனுப்பும் போது, எச்சரிக்கையுடன் இருக்கவும். மற்றையபடி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட வேலைகளை திட்டமிட்டுச் செய்து முடிப்பீர்கள். தொண்டர்களின் ஆதரவு நன்றாகவே இருக்கும்.

கலைத் துறையினருக்கு புகழும் பொருளும் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக நீங்கள் செய்யும் முயற்சிகள் பயனளிக்கும். இரசிகர்களின் ஆதரவுடன் பயணங்களை மேற்கொள்வீர்கள். உங்களின் வசீகரமான பேச்சினால் நன்மைகளைப் பெறுவீர்கள். உங்களின் தகுதிக்கு மீறி ஆசைப்படவேண்டாம்.

பெண்மணிகளுக்கு இந்த ஆண்டு கணவருடனான ஒற்றுமை நன்றாக இருக்கும். பொருளாதார நிலையும் சீராக் இருக்கும். உற்றார், உறவினரிடம் மதிப்பு, மரியாதை உயரும். ஆடம்பரப் பொருட்களை வாங்க விரும்பவீர்கள். இல்லத்தில் மருத்துவச் செலவுகள் குறையும். மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்தி உற்சாகம் அடைவீர்கள்.


மாணவமணிகள் படிப்பில் மேலும் ஆர்வம் செலுத்தினால் தான் எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெறமுடியும். உள்ளரங்கு விளையாட்டுகளில் மட்டுமே ஈடுபடவும். மற்றையபடி பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவு தொடர்ந்து நன்றாகவே இருக்கும்.

பரிகாரம்: ஸ்ரீ இராமபக்த அனுமனை வழிபடவும்.

(தொடரும்)

# இலங்கை அணி தோல்வி

# தென்னாபிரிக்கா வசம் தொடர்



(கேப்டவுன்)

மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

திலான் சமரவீர சதமடித்து இலங்கை அணியை இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து மீட்டு கௌரவப்படுத்தினார். தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற, இரண்டாவது டெஸ்டில் வெற்றிபெற்ற இலங்கை அணி தொடரை 1:1 என்ற கணக்கில் சமனிலையாக்கியது.

இந் நிலையில் மூன்றாவதும் தீர்க்கமானதுமான டெஸ்ட் கடந்த 3ஆம் திகதி கேப்டவுனில் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 580 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது.

இதில் ஜக்கலிஸ் 224 ஓட்டங்களையும் டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 160 ஓட்டங்களையும் பீற்றர்சன் 109 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் தம்மிக்க பிரசாந்த் 2 விக்கெட்டுக்களையும் வெலகெதர, கேரத் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 239 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் திலகரட்ண டில்சான் 78 ஓட்டங்களையும் சங்கக்கார, சண்டிமால் தலா 35 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரெயன், பிலான்டர் தலா 3 விக்கெட்டுக்களையும் மோர்னி மோர்கல், இம்ரான் தாகீர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் சாய்த்தனர்.

இந் நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 341 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலை பெற்ற இலங்கை அணியை பொலோன் அடிப்படையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடுமாறு தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் பணித்தார்.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சமரவீர சதமடித்து போராடியும் இரண்டாவது இன்னிங்ஸில் 342 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் தென்னாபிரிக்க அணிக்கு வெற்றியிலக்காக 2 ஓட்டங்கள் நிர்ணயிக்கப் பட்டது.

துடுப்பாட்டத்தில் திலான் சமரவீர 115 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 63 ஓட்டங்களையும் சங்கக்கார 34, திரிமன்னே 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக பிலான்டர், இம்ரான் தாகீர், ஜக்கலிஸ் தலா 3 விக்கெட்டுக்களையும் மோர்னி மோர்கல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 2 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு முதலாவது ஓவரை வீசிய பிரசாத் முதலாவது பந்துவீச்சை நோபோலாக வீசினார்.

இந்த பந்துவீச்சை எதிர்கொண்ட பீற்றர்சன் ஒரு ஓட்டத்தை எடுத்தார். இந்நிலையில் தென்னாபிரிக்க அணி 2ஆவது இன்னிங்ஸில் ஓவ் ஆரம்பமாகாத நிலையில் 2 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றி நாயகன் ஜக்கலிஸ் ஆட்ட நாயகனாக தெரிவானதுடன் டி வில்லியர்ஸ் தொடர் நாயகன் விருதை வென்றார்.

**தென்னாபிரிக்கா அணி மீண்டது**

இந்த டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியதன் மூலம் தென்னாபிரிக்க அணி 2008ஆம் ஆண்டுக்குப்பின் சொந்த மண்ணில் முதலாவது தொடரை கைப்பற்றியுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுடனான டெஸ்ட் தொடரை தனது சொந்த மண்ணில் கைப்பற்றியதன் பின் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணியுடனான தொடரில் தோல்வியடைந்த தென்னாபிரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா (மற்றொரு தொடர்) அணிகளுடனான தொடரில் சமனிலை பெற்றது குறிப்பிடத்தக்கது.




## மதில் விழுந்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

மதில் இடிந்து விழுந்ததில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உடல் நசியுண்டு பலியானார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையில் இடம்பெற்றுள்ளது.

வீதியை அகலமாக்கும் பொருட்டு மதிலை உடைத்ததாகவும் அப்போது மதில் பிரஸ்தாப நபரின் மேல் விழுந்ததாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான நாகராசா தருமதாஸ் (வயது 31) என்ற இளம் குடும்பஸ்தரே பலியானவராவார்.

படுகாயமடைந்த அவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (எ-4,11)

## திருவாசகமுற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெற்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலயத்தின் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.00 மணி முதல் நடைபெறவுள்ளது. (எ-1)

* * *

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் நாகர் தம்பிரான் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை முதல் நடைபெறவுள்ளது. (எ-1)

## மரண அறிவித்தல்

### துரைராஜா விக்கினேஸ்வரன் (பிள்ளையார்)



கிளிநொச்சி இரணைமடு கானகாம்பிகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், 1ஆம் வாய்க்கால் பிரமந்தனாறு மயில்வாகனபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா விக்கினேஸ்வரன் (பிள்ளையார்) அவர்கள் 06.01.2012 அன்று அகால மரணமடைந்தார்.

இவர் துரைராஜா-அமரர் செல்லம்மா தம்பதிகளின் மூத்த மகனும் சுமதியின் பாசமிகு கணவரும் தருஷனா (கிளி/ பிரமந்தனாறு ம.வி மாணவி), மதுஷன் (கிளி/ பிரமந்தனாறு ம.வி மாணவன்), பிரவிந் ஆகியோரின் பாசமிகு அப்பாவும், கௌரி (திருவையாறு), இந்திரன் (மருதநகர் நாதஸ்வர கலைஞன்), டெசிகரன் (உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கிறீன் டெக் கம்பனி விசுவமடு), பாலசுப்பிரமணியம் (பாலன்- அம்பாள் நகர் ) அமரர் தயாரூபன், கோபிநாத் (கிளி/ தருமபுர ம.வி உயர்தர மாணவன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும்.

சின்னத்துரை சரஸ்வதி தம்பதியினரின் (புளியம்பொக்கணை) அவர்களின் மருமகனும், கனகசபை (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன இலாகா ஊழியர்), அஜந்தா, சுகந்தி, கவிதா, அமரர்களான ஜெயமோகன் (மோகன்), ஜெயந்தி ஆகியோரது அன்பு மைத்துனரும், அகளியன் (யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவன்), அமலன் (கிளி/ திருவையாறு ம/வி. மாணவன்), கம்ஷன்(கிளி/ திருவையாறு ம/வி மாணவன்), அரஞ்ஷா (கிளி/ திருவையாறு ம/வி மாணவி), சரஞ்சி (கிளி/ திருவையாறு ம/வி மாணவி), இவர்களின் பாசமிகு மாமனாரும்,

சாருகா, டினோஜன் (கிளி/ கனிஷ்ட ம.வி), சாரங்கன், சங்கவி, திஹான், கீர்த்தனா, பிருதுவி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2012 - சனி) பி.ப 1.00 மணியளவில் 10ஆம் கட்டை விசுவமடுவில் உள்ள சகோதரனின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் புளியம்பொக்கணை நெடுமோட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்-சகோதரன்
து.டெசிகரன் (டெசி)
T.P: 0777866686

(சி-5463)

## அரசியற்...

விசாரணைகளே நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிகரமானது. ஐக்கிய நாடுகள் நிபுணர்குழு அறிக்கையில், யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பொதுமக்கள் உயிரிழந்ததாக ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முற்றுமுழுதாக நிராகரித்து வந்தது. யுத்தத்தின் போது பொது மக்களின் உயிரிழப்பு வீதம் பூச்சியம் என அரசாங்கம் தெரிவித்திருந்தது என அவர் மேலும் கூறினார்.

இந்த சர்வதேச குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை நடத்தும் நோக்கிலேயே அரசாங்கம் உண்மைகளைக் கண்டறியும் ஆணைக் குழுவை நியமித்தது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனால் நிறுவப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையில் இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## இலங்கை...

வசதி வழங்கப்படாவிடின் குறித்த அகதிகள் நாடு திரும்புவதற்கான பயண ஆவணங்களை பெறுதற்காக 4,400 ரூபாய் செலுத்த வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-5)

## இலங்கை தவறினால்...

நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அத்தகைய மீறல்களுக்கு தனிப்பட்ட பொறுப்புக்கூறுதல் நல்லிணக்கத்தின் முக்கியமானதொரு பகுதி என்று நாம் நம்புகின்றோம்.

இது தொடர்பாக இலங்கையின் அர்த்தமுள்ள சொந்த முயற்சிகள் பல பத்தாண்டுகளாக தொடர்ந்த மோதல்களால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதில் முன்னேற்றத்தை அளிக்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 2011 செப்ரெம்பர் கூட்டத் தொடரின்போது இலங்கை தேசிய மற்றும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறியிருந்தோம்.

போரின்போது இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு-பக்கம் சாராத வகையில் இலங்கை துரிதமாகவும் நம்பகமாகவும் பதிலளிக்க வேண்டும் என்றும் வெளிப்படுத்தியிருந்தோம்.

காணாமல்போனவர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து அவர்களின் குடும்பத்தினருக்கு வெளிப்படுத்துவதற்கும் மோதல்களில் கொல்லப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்கவும் இலங்கை உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இந்த விவகாரங்களில் ஐ.நா. மற்றும் அனைத்துல சமூகத்துடன் இணைந்து இலங்கை ஆக்கபூர்வமான முறையில் பணியாற்ற முன்வர வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொள்வோம்.

இறுதியாக இலங்கை அரசாங்கம் இந்த நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரங்களுக்கு அனைத்துலக கடப்பாடுகளுக்கு அமைய பதிலளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

பொறுப்புக் கூறுவதற்கு அரசை தொடர்ந்தும் நாம் வலியுறுத்துவோம்.

அதேவேளை அனைத்துலக மனிதாபிமான மனித உரிமைச் சட்டமீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதில் தமக்குள்ள அடிப்படை பொறுப்பை உள்ளக அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

ஒரு அரசாங்கத்தினால் தமது கடமையை நிறைவேற்றாத அல்லது நிறைவேற்ற விரும்பாத சூழ்நிலையில்தான் அனைத்துலக பொறுப்புக்கூறும் பொறிமுறையை உருவாக்க முடியும்.

இலங்கை விவகாரத்தில் தொடர்ந்து ஆர்வம் காட்டுவதற்கு நன்றி என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (எ-5)

## வடக்கு...

காரைதீவுப் பிரதேச சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பிரதேச தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்ததாவது,

வடக்குக் கிழக்கு மாகாணம் முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமானது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். வடக்குக் கிழக்கு இணைப்பை நாம் அடைவதற்கு முஸ்லிம் மக்களுடைய ஆதரவு எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாஷைகளை நாம் பலமுறை பல காலங்களில் பேசியுள்ளதுடன் அதற்குச் சில அடையாளங்களுமிருக்கின்றன. இந்த வகையில் அவர்களையும் எங்கள் பக்கத்தில் வைத்துக் கொண்டு அவர்களுடைய அரசியல் அபிலாஷைகளுக்கும் தீர்வைக் கொண்டு வரக்கூடியதாக எமது அரசியல் தீர்வு அமையுமென்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றோம். அப்பொழுது வடக்குக் கிழக்கு மாகாணத்தின் இணைப்பு சாத்தியமாகுமென்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

சிங்களவர்களாலும், பௌத்த மத கலாசார அமைச்சாலும், படைத்தரப்பினராலும் எங்கள் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது போல், முஸ்லிம் மக்களின் நிலங்களும் குடியிருப்புக்களும் இலங்கை அரசின் கையாட்களால், பௌத்த பிக்குகளால் பறிக்கப்பட்டு வருகின்றன.

அவர்களுக்கும் நெருக்கடிகள் கொடுக்கப்படுகின்றன. இந்த விடயத்தில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினை ஒன்றுதான் என்பதை முஸ்லிம்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர். எனவே இணைந்த வடகிழக்கு மாகாணத்தை அடைவதற்கு அவர்களையும் அரவணைத்துக்கொண்டு செல்ல வேண்டியது எமது கடமை என மாவை சேனாதிராஜா மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

## கனடாவிலும்...

வைத்துள்ளது.

கனடாவில் இயங்கி வரும் தமிழ் இளையோர் அமைப்பு இவ்வாறு புலிச் சின்னங்களைத் தாங்கிய முத்திரைகளை அச்சிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தமிழர் இன ஒடுக்குமுறை எனக்கு ஞாபகம் இருக்கின்றது என தபால் முத்திரையில் அச்சிடப்பட்டுள்ளது.

கனேடிய பொதுவிவகார மற்றும் அரசாங்க சேவைகள் அமைச்சர் ரோனா அம்ரோஸிடம் இந்தக் தபால் முத்திரை குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை கனேடிய தபால் திணைக்களத்தின் சேவை துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக கனடாவிற்கான இலங்கை ஐக்கிய தேசிய ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

தனிப்பட்ட சில விடயங்களை நினைவு கூரும் நோக்கில் கனேடிய தபால் சேவை வழங்கிய சந்தர்ப்பத்தை சிலர் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தியுள்ளனர். எனவே குறித்த தபால் முத்திரையை உடனடியாக ரத்து செய்யுமாறு கனேடிய அரசாங்கத்திடம் அந்த அமைப்பு கோரியுள்ளது. (எ-5)

## ஜனாதிபதி...

இடம்பெறும். பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியின் விஜயத்தின் போது இலங்கைக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்குவது தொடர்பாக இணக்கம் காணப்பட்டிருந்தது. இது தொடர்பாக இந்த விஜயத்தின் போது ஆராயப்படும்.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ரால் ஆகியோரும் பாகிஸ்தானுக்கு செல்லவுள்ளனர். (எ-5)


## மரண அறிவித்தல்

### திருமதி திருச்செந்தூர்நாதன் இராஜேஸ்வரி



இணுவில் கிழக்கு அங்களப்பாயை பிறப்பிடமாகவும், இல.116 கல்மடுநகர், கிளிநொச்சியில் வசித்து வந்து தற்போது கயட்டைப்புலம் கோப்பாய் வடக்கு, யாழ்ப்பாணத்தில் வசித்து வருபவருமான திருச்செந்தூர்நாதன் இராஜேஸ்வரி 06.01.2012 நேற்று வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் திருச்செந்தூர்நாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா சின்னம்மா தம்பதிகளின் மகளும் சுதாகரன் (பிரான்ஸ்), சுதாயினி (சுவிஸ்), சுபாஜினி (சுவிஸ்), சுகந்தன், சுதர்சன், சுகனியா, சுதர்ஜினி, சுபாஸ்கரன் (யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவபீட 3ஆம் வருட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விமலாம்பிகை சந்திரலிங்கம், சிறிஸ்காந்தராஜா, விஜயகிரீபன், அருள்ரூபன், ஆகியோரின் பாசமிகு மாமியும் எழிலரசி, ஓவியன், சர்மினி, சுஜீபன், சிந்துஜன், சியானுஜா, சிகானி, மகிழினி, கனிமொழி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 07.01.2012 இன்று சனிக்கிழமை அவரது கயட்டைப்புலம் கோப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கயட்டைப்புலம்
கோப்பாய் வடக்கு. (7250)

தகவல்:
குடும்பத்தினர்

## 2011 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறி

### Diploma in Visualize Management

Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, IT fundamentals, Windows Operation, Document management, Print Spooling & job management through MS Word, Creating and delivering presentation through MS POWERPOINT, Accelerating and amusing accounts through worksheet & Spread sheet Via MS EXCEL.

Note:- இப்பிரிவுக்கு மட்டும் பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

காலம்: 3 மாதங்கள்

| | |
|---|---|
| கட்டணம் | ~~2500/=~~ |
| சலுகைக் கட்டணம் | 1750/= |

புதிய பிரிவு ஆரம்பம்: 09.01.2012

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com

## பதவி வெற்றிடம்

- முகாமைத்துவ உதவியாளர்கள் (இருபாலாரும்)

ஆகக்குறைந்தகல்வித்தகைமை க.பொ.த. (சா) தரத்தில் சித்தி. ஆகக் குறைந்த வயது 23. தகைமை உடையவர்கள் 07.01.2012 இன்று சனிக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்
வலம்புரி

## வீடு விற்பனைக்கு

யாழ்.நகரின் வங்கிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் – பல்கலைக்கழகம் – விவேகானந்த அகடமி – தொழில் நுட்பக்கல்லூரி என்பவற்றிக்கருகாமையில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் சுற்று மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077-8767947
1/13, 2-ம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (7249)

## விற்பனைக்கு

- ஈரமா அரைக்கும் இயந்திரம் (42 ")
- டைனமோ (3 KW)
- ரைப் புள்ளிகள் மற்றும் பெலிற் வகைகள்
- 6.5 இஞ்சின் 8 குதிரைவலு பழுதடைந்த நிலையில் (England)
- Motor தண்ணீர் பம்

0774639589

குகன்
4 ஆம் ஒழுங்கை, முல்லை வீதி, பரந்தன். (கி-5464)

## கணக்கீடு புதியநூல் வெளிவருகின்றது

BY: S.S.சிவதாஸ் BBA (HRM.Spl)

கிரயக் கணக்கீடும் முகாமைக் கணக்கீடும்

விலை 1500/=

எதிர்வரும் 15ஆம் திகதியில் இருந்து அனைத்து புத்தகசாலைகளிலும் பெறலாம் (7247)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.